REGISTERED No. M. 6165. அணா 2

295

பத்ஹுல் இஸ்லாம்

FATH-HUL-ISLAM

30 OCT 1954

295-
4-54

மாத பத்திரிகை

நவம்பர் 1954.

விஷயம்.	பக்கம்.
நம் வருங்கால சமூகத்தின் பயிற்சி என்ன? ...	1
ஹாத்திம் தாயீ வாழ்க்கை வரலாறு (டி. எப். ஆர். மஆலி சாஹிப் (பாகவி)	5
அஹ்மத் நபியின் அற்புதச் செயல்கள் (ரஹ்மத் பாகவி) (சிறுவர் பகுதி)	11
காஜா நிஜாமுத்தீன் ஔலியா ஜீவிய சரித்திரம் (அய்யம் பேட்டை S. அப்துல் ரஜாக் சாஹிப்)	16
...ச் சின்னம் (தொடர் கதை)	23

இஸ்லாம் ஆபீஸ் :
...ந. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி,
மதராஸ் 5.

JC
ஒ/வை1,N24F1
M54
187036

பத்ஹுல் இஸ்லாம்

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு

வருஷ சந்தா	ரூ.	1–8–0
தனிப் பிரதி	அணா.	0–2–0
மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா	ரூ.	2–0–0

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

மஜ்மூஉ மவ்லூது.

இதில் றஸூலுல்லாவுடைய மவுலூதும், அதன் துஆக்களும், அந்த மௌலூதின் வரிசைகளும், ஒவ்வொரு பைத்தின் தலைப்பில் அதற்குள்ள ஸலவாத்து பாட்டுகளும், அதபுகளும், இத்துடன் முஹ்யித்தின் ஆண்டவர்கள் மவுலூதும், அதன் துஆக்களும், அதன் வரிசைகளும், மீரான் ஸாஹிபு ஆண்டவர்கள் மவுலூதும், அதன் துஆக்களும், அதன் வரிசைகளும், யாஸெய்யதி, யாகுத்பா, யாஸெய்யதி ஷைகி, மழைபைத்து, பீஹுப்பி ஸையிதினா பைத்து முதலியவைகளும் தழிழால் சுத்தமாய் யெழுதி கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டது. கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

விலை அணா. 15

ஷை மூன்று மௌலூதுகளும் அறபியில் கிளேஸ் காகிதம் கலிகோ பைண்டு. விலை ரூ. 1-8-0

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹை ரோட், திருவல்லிக்கேணி, மதருஸ், 5.

பத்ஹுல் இஸ்லாம்.

நவம்பர் 1954.

OCT 1954
MADRAS

நம் வருங்கால சமூகத்தின் பயிற்சி என்ன?

இக்காலை நம் பாரத நாட்டில், நம் இந்திய முஸ்லிம்களின் முன்னுள்ள மாபெரும் பிரச்னைகளில் 'நம் முஸ்லிம் சிறுவர்களை இனி எப்படிப் பழக்க வேண்டும்' என்ற பிரச்னையே மகத்தான பிரச்னையாக இருந்து வருகிறது. இப்போதுள்ள சமூகம், தேசம் சுதந்திரம் அடையாத முன்னர், பயிர்ச்சி யளிக்கப்பட்டதாகும். அதாவது பெரியவர்களாகிய நாம், பயிற்சி யளிக்கப்பட்ட முறையே வேறு. இனி நாம் சிறுவர்களுக்கு அளிக்கின்ற, அளிக்கப்போகின்ற பயிற்சியே வேறு விதமாய் இருக்கின்றது.

இக்கால சமூகமாகிய பெரியவர்களைப் பற்றி அத்துணை கவலைப் படவேண்டியதில்லை. ஆனால் வருங்கால சமூகமாகிய நம் சிறுவர்களைப் பற்றித்தான், நாம் அதிகமதிகம் சிந்தித்து அச்சிறூர்களின் வருங்கால வாழ்வை திட்டப்படுத்தி வகுக்க வேண்டியதாய் இருக்கிறது. முஸ்லிம் சமூகம் ஜீவித்திருப்பதா, மாண்டு மடிந்து போவதா என்ற சிக்கலான நிலைமை நம் சமூகத்துக்கு ஏற்பட்டிருப்பதை யாரும் எளிதில் தெரிந்து கொள்ளலாம். இதை யொட்டி இப்போதே நாமெல்லோரும் சிரத்தைக் கொள்ளாமல் இருந்து விடுவோமானால், பின்னர் நம் சமூகத்தின் கதி யாதாகுமோ அதை ஆண்டவன் தான் அறிவான்.

குழந்தை பிறந்து வளரும் போது, ஒவ்வொரு தாய்மாரும் தந்தையரும் குழந்தையை எப்படி வளர்க்க வேண்டும், எப்படி பழக்க வேண்டும், எப்படிப்பட்ட நடையுடைபாவனையில் பயிற்சி யளிக்க வேண்டும் என்ற சிரத்தை யுடையவர்களாக இருந்து வருவது மிக மிக சகஜம். நம் குழந்தை துஷ்டப் பிள்ளைகளுடன் பழகக் கூடாது. தெருவில் மண்ணிலும் சேற்றிலும் விளையாடக் கூடாது. நம் குழந்தை சுத்தமாய் சுறுசுறுப்பாய் இருக்க வேண்டு மென்று நாமெல்லோரும்

விரும்புகிறோம். அது மட்டுமா? நம் பிள்ளை தினமும் பள்ளிக்கூடம் போய் நன்றாய்ப் படித்துத் தேர்ந்து, ஒவ்வொரு வகுப்புப் பரீக்ஷையிலும் தவறிப் போகாமல் பாஸ் ஆகி உயர் வகுப்பிலும் படித்துத் தேர்ந்து, நல்ல காலேஜ் மாணவனாக விளங்க வேண்டும், அப்புறம் பி. ஏ., எம். ஏ. டிகிரி யெல்லாம் பெற்று அரசாங்க உத்தியோகங்களை வகித்து, பெரிய கனவானாகவும் பிரபுவாகவும், அரசாங்க மெம்பராகவும், மந்திரியாகவும் பிரதமராகவும் விளங்க வேண்டு மென்றும், எந்தத் தாய்மாரும் தம் குழந்தைகளைப் பற்றி, வருங்காலக் கனவு காண்பது சகஜமேயாகும். குடிசையில் பிறந்து வளரும் ஏழைக் குழந்தையின் தாய்மாரும் தான் இப்படி யெல்லாம் மனக்கோட்டை கட்டுவாள். இதை யாரும் ஏளனம் செய்ய முடியாது. தவறு என்று ஒதுக்கித் தள்ளிவிட இயலாது.

இக்கால உலகில் சர்வாதிகாரிகளாகவும், ஜனாதிபதிகளாகவும், பிரதம மந்திரிகளாகவும், மாபெருந் தலைவர்களாகவு மிருந்து வரும் பெரிய மனிதர்களுடைய பூர்வோத்திர வரலாறு எடுத்துப் பார்ப்போமானால், அவர்களில் பெரும்பாலோர், ஏழைக் குடிசையில் பிறந்து வளர்ந்தவர்களாகவோ, சாதாரண குடியானவர் குலத்தில் பிறந்தவர்களாகவோ, பாட்டாளி மக்களாய் வளர்ந்தவர்களாகவோ தாம் இருப்பதை பிரத்தியக்ஷமாய் காணலாம்.

எனவே இக்காலச் சிறுவர், வருங்காலத் தலைவராவதிலும், ஜனாதிபதியாய் விளங்குவதிலும் ஊரையாளும் அமைச்சராய் அமைவதிலும் சமூகத்துக்கு வழி காட்டும் தோழர்களாய் விளங்குவதிலும் ஒரு சிறிதும் ஆச்சரியமோ அசம்பாவிதமோ கிடையவே கிடையாது.

இது பொதுப்படையாக ஒவ்வொரு சமூகத்தாரும் வர்க்கத்தாரும் கொள்ள வேண்டிய சிரத்தையாகும். இதில், இக்காலை, நம் பாரத நாட்டில் முஸ்லிம்களின் நிலை, அதிலும் தமிழ் நாட்டில் வாழும் பேதை முஸ்லிம்களின் நிலை மிக மிக சொல்லத்தரமின்மையாக இருக்கிறது. இஞ்ஞான்று தமிழ் நாட்டு முஸ்லிம்கள் எந்தத் துறையிலும் உயர்ந்து இல்லை;

இங்கு நாம் யாம் ஆராய எடுத்துக் கொண்ட விஷயம், நம் வருங்கால சமூகமாகிய முஸ்லிம் குழந்தைகட்கு எத்தகைய பயிற்சி தர வேண்டும், எத்தகைய கல்வி போதிக்கப்பட வேண்டும், எம்மாதிரியான சூழ்நிலையில் மக்களை வளர்க்க வேண்டும் என்பதேயாகும்.

"எல்லாக் குழந்தைகளும் இயற்கையின் பிரகாரமே பிறக்கின்றன. அதன்பின் அதன் பெற்றோர்களும் (உற்றோர்களுமே) அக்குழந்தைகளை நஸ்ரானிக் கிறிஸ்துவர்களாகவோ, யூதர்குழாமாகவோ (நாஸ்திகராகவோ, விக்கிரகப் பூசகர்களாகவோ) ஆக்கி விடுகிறார்கள்"—இது நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்) அவர்கள் நவின்றருளிய நல்வாக்கியக் கருத்தாகும்.

187036

முஸ்லிம் குழந்தை பிறந்த உடன் அதன் செவிகளில் அல்லாஹ்-ரஸூலின் திருநாமங்களாகிய பாங்கு உச்சரிக்கப் படுகிறது. அல்லும் பகலும், தாய்மார்கள் தம் குழந்தைகளை அல்லாஹ்-ரஸூலின் திருப் பெயரை சொல்லிக் கொண்டே போஷித்துப் போற்றி வளர்க்கிறார்கள். எனவே முஸ்லிம்களின் மூச்சிலும், உதிரத்திலும், உயிரிலும் இஸ்லாமே உறைந்து காணப்படுகிறது. முஸ்லிம்களுக்கு இஸ்லாமே உயிரினும் சிறந்த சாதனம். முஸ்லிம்கள் இகத்திலும் பரத்திலும் தங்கட்கு நற்சாதனம் அளிக்கும் முக்தி மார்க்கமாய் நினைத்திருப்பது பரிசுத்த இஸ்லாமேயாகும்.

நம் முஸ்லிம்கள், தம் வருங்கால சமூகமும் சந்ததியுமாகிய சிறு பிள்ளை எப்படி வளர்க்கிறார்கள், எந்த தர்மம் போதிக்கிறார்கள், எம் முறையில் பயிற்சி யளிக்கிறார்கள், எத்தகைய நடை யுடை பாவனையில் பிள்ளைகளை பக்குவப் படுத்துகிறார்கள். என்ன மாதிரியான பண்பாட்டில் குழந்தைகளின் வாழ்நாளை வகுக்கிறார்கள், என்பதை யெல்லாம் நோக்கும் போதுத்தான், நாம் நம் சமூக நிலையைக் கண்டு இரத்தக் கண்ணீர் வடிக்க வேண்டி யிருக்கிறது.

குழந்தைகளில் பொதுப் பள்ளிக்கூடங்களுக்கு காலை 9 மணிக்கோ 10 மணிக்கோதான் போகிறார்கள். அதற்கு காலை நேரத்தில், மத்ரஸா பள்ளிவாசல்களுக்கு அனுப்பி அரபு அட்சரங்களை கற்பிக்கலாம். குர்ஆன் ஷரீப் ஜுஸுக்களை ஓதிக்கொடுக்க ஏற்பாடு செய்யலாம். அதன்பின், குழந்தைகள் உலக சம்பந்தமான தம் படிப்புகளை நன்றாக படிக்கட்டும். பிறகு, இரவு நேரங்களில் சூரியஸ்தமனத்துக்குப்பின் (மக்ரிபு நேரங்களில்) நம் சிறுவர்களை பேஷ்இமாம், மௌலவி, ஹஜ்ரத்து உஸ்தாதுமார்களிடம் அனுப்பியோ, அல்லது வீட்டிலேயே ஏற்பாடு செய்தோ இஸ்லாம் மார்க்க சம்பந்தமான இல்முகளை கற்றுக் கொடுக்கலாம்.

இங்ஙனம் காலையில் ஒரு வேளையும், மாலையில் ஒரு வேளையும் ஓதுக்கி, பிள்ளைகளுக்கு திருக்குர்ஆன் ஓதும் மார்க்கக் கல்வி மஸ்அலாக்களும் கற்றுக் கொடுத்து வந்தால், பிள்ளைகள், பள்ளிக்கூட படிப்பினூடே, தம் இஸ்லாமியக் கல்வியையும் கற்றுத் தேர்ந்து, இஸ்லாத்தின் பெருமையை நிலை நிறுத்தி வைப்பார்கள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

முஸ்லிம்களுக்கு வேண்டிய உலக சுகபோக வாழ்வாகிய "துன்யா" மட்டுமல்ல, நாம் மரித்தபின், இத்தரணி வாழ்வை விட்டுப் போனபின், ஆன்மலோக வாழ்வில் நம்மவர்க்கு சாஸ்வதமான ஆனந்த நிலையை அளிக்க வல்லதான "ஆகிரத்" தும் நமக்கு அவசியமானதே யாகும். முஸ்லிங்கட்கும் துன்யாவும் வேண்டும் தீனும் வேண்டும். உலக சம்பந்தமான கல்வியினால் மனிதன் சுகபோக சாதனத்தை அடை

கிறுன். ஆஸ்திதியும் பூஸ்திதியும் சம்பாதித்து சகபோக வாழ்வு வாழுகிறுன். இறுதியில் மூப்பு வந்து அல்லது முடிவு காலம் நெருங்கி இறந்துப் போகும் போது, எல்லா சுகபோக செல்வங்களையும் அரும் பெரும் பூஸ்திகளையும் அப்படியே விட்டுப் போய் விடுகிறுன். அப்போது, அவனுடன் பரலோக வாழ்வில் பயன்படக் கூடியதாய் கூடச் செல்வது என்ன? அவன் இத்தரணியில் இறைவன் திருநாமத்தை தியானித்து நல்லனுஷ்டானம் புரிந்து தான தர்மங்கள் செய்து சமூகத் தொண்டியற்றி சம்பாதித்துக் கொண்ட புண்ணியமான காரியங்களே யாகும்.

ஆஹா! அந்தப் பரலோக வாழ்க்கையில் இடையரு இன்ப மயமான சாதனத்தை சம்பாதித்துக் கொள்வதற்கு நாம், நம்மையும் நம் வருங்கால சமூகமாகிய பிள்ளைகளையும் 'தர்பியத்' செய்து வைக்க வேண்டாமா? அக்குழந்தைகளுக்கு ஆகிரத்துக்குரிய பயிற்சியை அளிக்க வேண்டாமா? இதற்கெல்லாம் இஸ்லாமிய அறிவு ஞானம் வேண்டும், மதாசார ஒழுக்கப் பயிற்சி வேண்டும், இஸ்லாமிய சம்பிரதாயத்துக்கும், தர்ம நியதிக்கும் கட்டுப்பட்டு நடக்கும் தன்மை நம் குழந்தைகளின் தன்மையில் அமைய வேண்டும், இதற்கு முஸ்லிம் பெரியோர்களாகிய நாம் கடமையை உணர்ந்து வழி முறை வகுத்து சீருடன் நடந்து கொள்ள வேண்டும்.

ஸுல்தான் சிக்கந்தர் (அலை) கிஸ்ஸா.

ஸுல்தான் சிக்கந்தர் ஜுல்கர்னைன் (அலை) அவர்கள் ஒரு நபியாக இருந்து உலகத்துக்கும், உலக மக்களுக்கும் பல நல்ல காரியங்கள் செய்திருக்கிறுர்கள். ஸுல்தான் சிக்கந்தர் ஜுல்கர்னைன் உடைய அரசாட்சி உலகத்தில் சிறந்த அரசாக்ஷியாய் இருந்தது. "ஜுல்கர்னைன்" என்றுல் இரண்டு கொம்புகளையுடையவர் என்று அர்த்தம். இதன் விபரமெல்லாம் இந்த நூலில் விரிவாய் சொல்லப்பட்டிருக்கிறது.

இத்துடன் நம்றாது மன்னருடைய கிஸ்ஸாவும், நபி லூத் அலைஹிஸ்ஸலாமுடைய கிஸ்ஸாவும் சேர்த்து எழுதப்பட்டிருக்கிறது. எல்லோரும் படித்து அறிய வேண்டிய பிரயோஜனமான புஸ்தகம் இது. சுத்தத் தமிழ் விலை அணா 8

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்
நெ. 20, ஹைரோடு, திருவல்லிக்கேணி, மதறுஸ் 5.

(2-வது பகுதி)

பண்டை அரபு நாட்டு வள்ளல்

ஹாத்திம் தாயீ வாழ்க்கை வரலாறு.

டி. எப். ஆர். மஆலி சாஹிப் (பாகவி)

வள்ளல் வரலாறு

ஹாத்திம் தாயீ என்ருல் 'தாயீ' வம்சத்தைச் சேர்ந்த 'ஹாத்திம்' என்று பொருள்படும். நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்) அவர்கள், இத்தாரணியில் அவதரிப்பதற்கு கொஞ்ச காலத்திற்கு முன், அரபு நாட்டில் "பனீ தாயீ-கபீலா" என்றெரு வம்சத்தார் இருந்து வந்தனர். 'குறைஷ்' வம்சத்தைப் போலவே 'தைஃபி' (தாயீ) வம்சத்தினரும் வீரம், பராக்ரமம், பெருந்தன்மை, தானதருமம், புலமை, விவேகம் முதலியவற்றில் சிறந்ததோர் வர்க்கத்தினராய் இருந்து வந்தனர்.

நபிகள் நாயகம் (ஸல்) அவதரிப்பதற்கு முன் அரபு, நாடு எத்தகைய அஞ்ஞான அந்தகாரத்திலும், அவிவேக அட்டூழியத்திலும் ஆழ்ந்து கிடந்ததென்பது சரித்திரப் பிரியர்கட்குத் தெரிந்த விஷயம். அப்படிப்பட்ட காலத்தில் இந்த 'தாயீ' வம்சத்தினர், உத்தம குண ஒழுக்கமுள்ளவர்களாகவும், தான தருமத்திற் சிறந்தவர்களாகவும் இருந்து வந்தார்கள். அக்காலை ஹாத்திம் தாயீ அந்த வம்சத்திற்குத் தலைவராகவும் கண்ணியமானவராகவும் இருந்து வந்தார்.

அரபுகளாகிய பதுவிகள், தமக்குள் விருந்தோம்பிக் கொள்வதில் மிக்க பிரியமுடையவர்களா யிருந்து வந்தனர். உணவு உண்ணும் நேரத்தில் தம்முடைய கூடாரத்துக் கருகில் யார் வந்த போதிலும், அன்னர் நண்பரோ உற்ருரோ அற்ருரோ எவராயிருந்த போதிலும், அன்னவரை உபசரித்துத் தம்மோடு விருந்து புசிக்க அழைத்துண்பார்கள். உணவு உண்ணும் போது தனியாக அமர்ந்துண்ணும் பழக்கம் அக்கால அரபுகளிடம் கிடையாது. எவனேனும் விருந்தினர்க்கு தாராளமாய் உணவளிக்க மனங்கோணுவானுனல் அவனை கொடிய உலோபி என்றே அரபுப் பதுவிகள் கருதுவார்கள்.

விருந்தோம்புதல் சர்வ சகஜமா யிருந்த காலத்திலேயே, தாயீ வம்சத்தினர் இத்துறையில் மிகப் பிரசித்தியும் நற்பெயரும் பெற்றிருந்தார்கள்.

அப்படிப்பட்ட காலத்தில் ஹாத்திமுடைய பெயர் குன்றின் மீதிட்ட விளக்கு போல் நாற்றிசையும் கீர்த்தியுடன் பிரபல மடைந்திருந்தது. விருந்தளிப்பதிலும், தானதருமஞ் செய்வதிலும் ஹாத்திமுக்கு இணையானவர் ஒருவருமே அக்காலை இருந்தது கிடையாது. ஹாத்திமுடைய கூடாரத்துக்கு வந்து யாரும் எந்த ஏழையும் பசியுடன்

அல்லது வெறுங்கையுடன் திரும்பிச் சென்றது கிடையாது. ஹாத்திமை யணுகினல் கோரியது நிச்சயம் கிடைக்கு மென்ற நம்பிக்கையுடன் தான் யாரும் வருவார்கள். 'ஸக்கி' என்ற பெயரால் அவர் பொது மக்களால் அழைக்கப்படுவார்.

உலோபிகளும் இருந்தனர்

பண்டை அரபியரில் ஹாத்திம் தாயீ தானதர்மஞ் செய்வதில் சிறப்புற்றிருந்தது போல், உலோபித் தனத்திலும் அக்கால ஒரு சிலர் பிரபல்யம் பெற்றிருந்தார்கள். இத்தகைய கஞ்சத்தனம் படைத்த உலோபிகளை அரபுகள் "பகீல்கள்" என்று சொல்வார்கள். விருந்தோம்பாதவர்கட்கும், யாசகர்களை விரட்டுவோருக்கும், அதிதிகளுடன் பெருந்தன்மையாய் நடந்து கொள்ளாதவர்கட்கும், அனுதை-அகதிகளிடம் கருணை காட்டாதவர்கட்கும் "பகீல்" என்ற இழிப்பட்டம் அளிக்கப்படும். அக்கால 4-பேர் பெரிய பகீல்களென்று அழைக்கப் பட்டார்கள். அவர்கள்: (1) ஹுத்தையா, (2) ஹுமைத் அர்கத், (3) அபுல் அஸ்வதயி, (4) காலித் பின் ஸப்வான். இந்நால்வரும் பகீல்கள் என்ற அபவாதம் பெற்றதற்குக் காரணம்-அவர்கள் தாராளமாய் விருந்தினர்களை அழைக்காதிருந்தமையும், வந்த விருந்தினர்களுடன் உதாரத் தன்மை யோடு நடந்து கொள்ளாமையும் தான்.

(1) ஹுத்தையாவைப் பற்றி ஒரு சம்பவம்:—இவன் ஒரு நாள் தன் வீட்டு வாயலண்டை உட்கார்ந்து கொண்டிருந்தான்; கையிலொரு கழியையும் வைத்துக் கொண்டிருந்தான். அச்சமயம் ஊருக்குப் புதிய பிரயாணி யொருவன் அங்கு வந்து, ஹுத்தையாவை யணுகி, "ஐயா! நான் இன்று தங்கள் விருந்தாளியாக இருக்கலாம் என்று விரும்புகிறேன்" என்று விண்ணப்பித்துக் கொண்டான். ஹுத்தையா அந்த அதிதியை நோக்கி, ஏளனமாய்ச் சிரித்து, கையிலிருந்த கழியை சுட்டிக் காட்டி, "வாரும் வாரும், உம்மைப் போன்ற விருந்தாளிகளை நன்ருய் உபசரிப்பதற்காகத் தான் இந்தக் கழியை கையில் பிடித்துக் கொண்டிருக்கிறேன்" என்ருன். இதை யறிந்த யாத்திரிகன் பயந்து போய் விட்டான். ஊரார் இச்சம்பவத்தை யறிந்து ஹுத்தையாவின் நடத்தைக்காக அவனை 'பகீல்' என்று இழிவாய் அழைக்கலானுர்கள்.

(2) ஹுமைத் அர்கதைப் பற்றிய சம்பவம்:—இவன், அவனைப் போல் விருந்தாளிகளை வீட்டு வாயிலிலேயே விரட்டித் துரத்த மாட்டான். ஆனுல், வீட்டுக்குள் அழைத்து வந்து உணவு படைத்து விட்டு, பரிகாசமாகவும் இழிவாகவும் அதிதிகளைப் பேசி மனதைப் புண் படுத்துவான். ஓர் உதாரணம்: ஒரு முறை ஒரு அதிதிக்கு உண்பதற்காக பேரீத்தம் பழங்களை கொண்டு வந்து படைத்தான். விருந்தினர் உண்டு எழுந்த போது, "என்னய்யா, நீவீர் ரொம்பப்

பசியோடு வந்தீர் போலும்; பழங்களோடு கொட்டைகளையும் சேர்த்து விழுங்கி விட்டீரே" என்று பரிகசித்தான். இதற்காக அரபுகள் இவனை பகீல் என்றார்கள்.

(3) அபுல் அஸ்வதயியைப் பற்றிய சம்பவம்: இவர் ஒரு பெரிய பக்தராகவும், நபிகள் நாயக விசுவாசியாகவும், கல்வி யறிவில் தேர்ந்தவ ராகவும் தானிருந்தார். நான்காம் கலீபா ஹஜ்ரத் அலி (ரலி) யுடைய அத்தியந்த சிஷ்யராகவு மிருந்தார். அரபு மொழியின் 'நஹ்வு' என்னும் இலக்கணக் கலையை தொடுத்து உருவாக்கி பகிரங்கப்படுத்திய இலக்கணப் பண்டிதருமாவர். இப்படிப்பட்ட சிரியருக்கும் 'பகீல்' (உலோபி) என்ற இழி பெயர் கிடைத்து விட்டது விந்தையா மன்றோ? இதற்குக் காரணம் யாதெனில்: ஒரு பகீர் இவரிடம் வந்து "பசிக் கிறது; பசிப்பிணி யகல ஏதாவது கொடுங்கள்" என்று கேட்டான். இவர் அப்போது அற்ப மனதுடையவரா யிருந்ததால் ஒரே ஒரு பேரீச் சம் பழத்தை எடுத்து அந்த யாஸகனிடம் கொடுத்தார். அந்த ஏழை "என்ன பிரபு! ஒரே ஒரு பழம் கொடுக்கிறீர்களே; இன்னம் கொடுங்கள்; அல்லாஹு தஆலா, உங்களுக்கு சுவர்க்க லோகத்தில் ஒன்றுக்குப் பத்து கொடுப்பான்" என்று வேண்டினான். அதற்கிவர், "போ போ, சுவர்க்கத்தில் எனக்கு ஒன்றுக்கு ஒன்று கிடைத்தாலே போதும், போ" என்று கூறினாராம்.

இதன் காரணமாகத் தான் அபுல் அஸ்வதும் பகீல்களின் வர்க் கத்தில் சேர்க்கப்பட்டார் என்று கருதப்படுகிறது.

(4) காலித் பின் ஸப்வானைப் பற்றிய சம்பவம்:—இன்னவர் அக் காலை மாபெரும் தனவந்தராயும், தேசாதிபதியாயும், கீர்த்திப் பிரதாப முடையவராகவு மிருந்தார். ஆனால் கொஞ்சம் 'பிசுநாறித்தனமும்' உடையவரா யிருந்து வந்தார். காசு பணத்தைக் கண்டால் உடனே ஆக்ரமித்து பெட்டியில் பூட்டி வைக்க முற்பட்டு விடுவார். ஒரு காசையும் எடுத்துப் பிறருக்குக் கொடுப்ப தென்பது அவருக்கு மகா வேதனையாக இருக்குமாம். ஒரு நாள் அவர், வழியே போய்க் கொண் டிருக்கும் போது, மண்ணில் ஒரு 'திர்ஹம்' (சிறிய வெள்ளி நாணயம்) கிடப்பது காணப்பட்டது. உடனே குனிந்து அதை யெடுத்து மண்ணைத் துடைத்து உள்ளங்கையில் வைத்துக் கொண்டு "ஏ திர்ஹமே, என்னை விட்டு நீ இத்தனை நாள் எங்கே பிரிந்துப் போய் விட்டாய்.? உன்னைப் பிடித்துப் பெட்டியில் போட்டுச் சிறைப்படுத்தி வைக்க நான் எங்கெல்லாம் தேடியலைவது?" என்று அர்ப்பத்தனமாய் கூறி, அதைப் பேழையில் போட்டு வைத்துக் கொண்டாராம்!

அக்கால அரபியரில் இவரொரு மன்னர் போலிருந்தும், செல்வமும் சொத்தும் இவர் பால் ஏராளமாய் இருந்தும், இவர் அற்பத்தனமான முறையில், கஞ்சத்தனமும் உலோபித்தனமும் காட்டி வந்தது எல்லோ

ருக்கும் வியப்பாகவே இருந்து வந்தது. இவர் ஓர் அதிபதியாய் இருந்த தால், யாரும் இவரை அந்த உலோபித் தனத்திற்காக கண்டிப்பது மில்லை. அங்ஙன மிருந்தும், ஒரு நண்பர் அவரையணுகி, "காலித், தாங்களிடமோ ஏராளமான பொக்கிஷங்களும், சொத்துச் செல்வங்களும் இருக்கின்றனவே; அங்ஙன மிருக்க, அற்ப காசுக்காக ஏன் ஆசைப் படுகின்றீர்?" என்று கேட்டார். அதற்கவர் "நண்பா, ஆம்; என்னிடம் ஏராளமாய் சொத்தும் செல்வமும் இருப்பது வாஸ்தவம்தான்; ஆனால் என்னைவிட மகா தனவந்தர்களும், பிரபுக்களும், அதிபதிகளும் இத்தரணியில் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்களே, நானும் அவர்களைப் போல் ஆக வேண்டாமா?" என்று பதில் கூறினாராம்.

ஆகையால், மேலே பிரஸ்தாபிக்கப் பட்ட நால் வகையினரும் பகீல்கள் என்று பண்டை அரபுகளால் கருதப் பட்டு, இழிமொழியால் அழைக்கப்பட்டு வந்தனர். ஆனால் ஹாத்திம் தாயீ மேற் கூறிய அர்ப்ப குணங்களில் கிஞ்சித்தேனும் இல்லாமல், தாராளத் தன்மையில் தனக்கிணை தானாகவே இருந்து வந்தார்.

ஹாத்திமின் நற்குணம்.

ஹாத்திம் தாயீ தமது வாழ் நாளில் ஒரு சந்தர்ப்பத்தில்கூட அற்ப புத்தியை வெளிப்படுத்தியதே கிடையாது. எந்த விருந்தாளியும் அவரது இல்லத்துக்கு வந்து மனம் கோணிச் சென்றது கிடையாது. விருந்தாளியின் மனம் கசக்கு வண்ணம் ஹாத்திம்தாயீ நடந்து கொண்டதே கிடையாது. எந்தப் பிச்சைக்காரனும் ஹாத்திமிடம் கையேந்திக் கேட்டு விட்டு வெறுங் கையோடு திரும்பியது கிடையாது. விருந்தாளியின் வயிறு நிரம்பாம லிருக்க, தன் வயிற்றுக்காக ஏதொன்றும் அவர் ஒதுக்கி வைத்துக் கொண்டது கிடையாது.

இப்னு அஃறாபீ என்ற அரபு புலவர் ஒருவர், தமது கிரந்தத்தில் ஹாத்திம்தாயீயின் அறிவாற்றலைப் பற்றி பின் வருமாறு கூறுகின்றார் :– "ஹாத்திம் என்னைப் போல் ஒரு புலவராக (ஷாயிராக) இருந்தார். நல்ல கவிகளை அரிய கற்பனையோடு எழுதுவார். அறிவாற்றலில் அவரும் நானும் சமத்துவமா யிருந்தோம். ஆனால், செல்வந்தத் தன்மையில் நான் அவருக்குக் கொஞ்சங்கூட இணையாக இல்லை. ஏனெனின் அவர் பெரிய தனவந்தராய் இருந்தது போலவே, உதார குணமும் தாராளத் தன்மையும் உடையவராய் இருந்தார். நான் பரம ஏழை; ஆயினும் அவர் என்னோடு சர்வ சகஜமாகப் பழகுவார். தன் செல்வத் தன்மையைக் கருதி அவர் கொஞ்சங்கூட பெருமை கொள்ள மாட்டார். ஹாத்திம் என்னைப் போலவே கவிகளை ஏராளமாய் புனைந்து எழுதுவார். ஆனால், என் கவிகளைவிட அவர் கவிகளில் புலமை அதிகம் மிளிரும். அவர் தாராளத் தன்மையிலும், கொடையளிப்பதிலும் எப்படிச் சிறந்தவராய் இருந்தாரோ அவ்வாறே, லோக

வாழ்வையும் ஏழ்மை நிலைகளையும் எடுத்துரைப்பதில் தனி சிறந்தவராக இருந்தார்.

"அதுமட்டுமல்ல; ஹாத்திம்தாயீ போர்க்களத்திலும் முன்னணி யில் நின்று வீர தீர பராக்ரமத்தை வெளிப் படுத்துவார். அவர் ஈடுபடும் போராட்டங்களில் நிச்சயம் வெற்றி கிடைக்கும். போர்க்களத்தில்கூட உணவு புசிக்கும் நேரத்தில் எதிரிப் படையினரில் எவனேனும் வந்து 'பசிக்கிறது' என்று சொன்னால், தன் உணவில் ஒரு பகுதியை அவனுக் குக் கொடுத்து பசியாற்றுவார். உணவு நேரத்தில் பகைவனோடும் பகைமை பாராட்டா குணம் எங்களில் ஹாத்தில் ஒருவருக்கே உண்டு.

"போர்க்களத்தில் ஹாத்திமிடம் மற்றோர் நல்ல குணத்தையும் நான் கண்டேன், ஆனால் அந்த குணம் எனக்குப் பிடிக்கவில்லை, அதாவது போர்க்களத்தில் எதிரிகளின் படையிலிருந்து பிடிபடு பவர்கள் கைதிகளாகப் பாவிக்கப் பட்டு நடத்தப்படுவர். இவர்களை பழைய கைதிகளாக வைத்துக் கொள்வோம். இப்படிப்பட்ட கைதிகள் விஷயத்தில்கூட ஹாத்திம்தாயீ தயாளத் தன்மையும் காருண்யமும் காட்டுவார். கைதிகளில் எவனேனும் தாழ்மை சுபாவம் காண்பித்துக் கெஞ்சிக் கேட்டால் அவனை நிபந்தனை யில்லாமல் ஹாத்திம் விடுதலை புரிந்து விட்டு விடுவார்."

விசேஷ விருந்தோம்பம்.

பண்டை நாட்களில் அரபுகள் இஸ்லாமிய ஆண்டின் ஏழாவது மாதமாகிய ரஜபு திங்களை விசேஷ விருந்துகள் புரிந்து புனிதமாதமாகக் கொண்டாடுவார்கள். இங்ஙனம் ரஜபை கொண்டாடுபவர்களில் அக் காலை ஹாத்திம் தாயீ முதன்மையாக விளங்குவார். அந்நாட்களில் ஹாத்திம், தினமும் பத்து ஒட்டகங்களை அறுத்து அதன் மாமிசங் களை ருசிகரமாகப் பொரித்து மக்களுக்கு ஊட்டி களிப்புறச் செய்வார். ஹாத்திமின் இந்த விசேஷ விருந்துக்கு, அரபு மக்கள் வெகு தொலை தூரத்திலிருந்தெல்லாம் வந்து கூடுவார்கள். வருகிறவர்களில் யாருக் கும் பாரபக்ஷமின்றி உயர்வு தாழ்வு பாராமல் அனைவர்க்கும் அன்பு டன் அமுது அளித்து ஆதரிப்பார். இந்நாட்களில் ஹாத்திமுடைய கூடாரம் சூழ ஏதோ வைபவங்களும் உரூஸும் நடைபெறுவது போலி ருக்குமாம். ஏழை எளிய மக்களுக்கு அஃது ஒரு கொண் டாட்ட நாளாகவே இரா நின்றது!

வழி காட்டல்.

பனி-குளிர் நாட்களில் ஹாத்திம் தாயீ, தம் அடிமை ஆட்களை ஏவி தீ மூட்டச் செய்து வெளிச்சம் போடுவார். தூரத்திலுள்ளவர்கள், அது ஹாத்திமுடைய கூடாரம் என அறிந்து கொண்டு, துரிதமாய் வந்து குளிர் காய்ந்து, உணவும் உட்கொண்டு செல்வார்கள்.

பாலே வனத்தில் இராக்காலங்களில், மூடுபனியில் வழி தெரியாமல் தட்டுத்தடமாறி அலேபவர்களும், ஹாத்திமுடைய கூடாரத்திலிருந்து எழும் இந்த தீச் சுடரைக்கண்டு, திக்கும் வழியும் தெரிந்து ஊர் வந்து சேருவார்கள்.

வழி தெரியாது அலேயும் பாதசாரிகளேயும் பிரயாணிகளேயும் நேர் பாதை காட்டி யழைத்துவருவதற்காக, ஹாத்திம் சில ஆட்களேயும் நிய மித்திருந்தார். அலே கடலில் வீழ்ந்து திக்கு காணுமல் அல்லலுறும் மக்களுக்கு, கலங்கரை விளக்கமானது திசை காட்டி ஆதரித்து காப் பதுபோல், பாலேவன மென்னும் மணல் காட்டிலே அலேயும் அனுதை களே, ஹாத்திமுடைய ஆட்கள் காப்பாற்றிக் கொண்டு வந்து சேர்ப் பார்கள்.

(தொடரும்.)

ஜிஹாங்கஷ்த் தற்புதம்

இது நபி நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலேஹி வஸல்லம் அவர்களின் செல்வப் புதல்வி பாத்திமா நாயகி அவர் களின் சந்ததியில் அவதரித்த ஸையிதுனு அஹ்மதுல் கபீர் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் புதல்வர் ஸையிதுனு ஜலாலுத்தீன் ஹுஸேன் புகாரி அவர்கள் செய்துள்ள யாத்தி ரையின் போது கண்டுள்ள அற்புதங்களே விரிவாக விபரிக்கும் புஸ்தகம். மேல்படியார், றஸூல் ஸல்லல்லாஹு அலேஹி வஸல்லம் அவர்களால் "மகுதூம் ஜிஹானியான் ஜிஹாங் கஷ்த்" என்னும் பட்டம் பெற்று, ஆகாயத்திலும், பூமியிலும், கடலிலும் இன்னும் மனுடர்க ளறியாத அநேக விநோதமான அற்புதமுள்ள ஸ்தலங்களிலும் யாத்திரை செய்து, அங்காங்கு கண்ட அற்புதங்களே விபரித்ததை பார்ஸி பாஷையில் முஸாபற் நாமா என்னும் கிதாபாக கோர்வை செய்யப்பட்டதை, தமிழ் தெரிந்த கனவான்கள் படித்தானந்திக்குமாறு தமிழில் மொழி பெயர்த்து "ஜிஹாங்கஷ் தற்புதம்" என்னும் நாமத்துடன் அச்சிடப்பட்டுள்ளது.

இதில் விபரித்திருக்கும் அற்புதக் காட்சிகளே படிக்க படிக்க மிக ஆனந்தமா யிருக்கு மென்பதில் ஐயமில்லே.

இதன் விலே அணு. 12

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்
நெ. 20, ஹைறோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

அஹ்மத் நபியின் அற்புதச் செயல்கள்.

(ரஹ்மத் பாகவி.)

குறிப்பு: பண்டைக்கால மக்கள், ஆச்சரியங்களையும் அற்புதங்களையும் கண்டு அச்சப்படுபவர்களாகவும், தெய்வீக நம்பிக்கை கொள்பவர்களாகவும் இருந்து வந்தார்கள். ஆண்டவன் புறத்திலிருந்து சன்மார்க்க போதனைக்காக எழுந்தருளும் நபிமார்கள்—ரஸூல்மார்களின் நற்சொற்களை நம்புவதற்குக்கூட, அப்பண்டை ஜனங்கள் தயங்கித் தயங்கி, அற்புதச் செயல்கள் செய்து காட்டும்படி வற்புறுத்துவார்கள். எனவே நபிமார்களும் ரஸூல்மார்களும், ஆண்டவனுடைய குத்ரத் என்னும் மகாத்மியத்தைக் கொண்டு, 'முஃஜிஸா' என்னும் அற்புதச் சம்பவங்களை சாதித்துக் காட்டுவார்கள். அப்படிப்பட்ட அற்புதங்களில் சிலதை, இதன் கீழ் எளிய நடையில் சிறுவர்களுக்காக எடுத்துக் கூறுவோம்:—

சந்திரன் பிளந்த அற்புதம்.

ஒரு முறை, குறைஷ் குலகாபிர்கள் பலர், நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் திருச்சமுகத்தில் கூடினர். எல்லோரையும் திருநபி (ஸல்) அவர்கள் அன்புடன் வரவேற்றார்கள். அப்போது குறைஷ் காபிர்களில் சிலர் முன்வந்து, "ஏ முஹம்மதே, தாங்கள் ஆண்டவன் புறத்திலிருந்து அனுப்பப்பட்ட நபி என்று வாதிக்கிறீர்களே, தாங்கள் உண்மையான நபி என்பதை நாங்கள் எளிதில் எப்படி நம்புவது? ஆகையால், உலகில் சாதாரணமாக யாராலும் செய்ய முடியாத விதமான ஏதாவது அற்புதம் ஒன்றை செய்து காட்டுங்கள். அப்புறம் நாங்கள் தங்களை நம்பி ஈமான் கொள்ளுகிறோம்" என்று சொன்னார்கள்.

அப்போது நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள், வானத்தின் பக்கம் நோக்கினார்கள். அன்று இருள் நிறைந்திருந்த போதிலும், பூரணச்சந்திரன் வானத்தில் மிகப் பிரகாசத்துடன் தோன்றியது. பிறகு நபிகணாயகம் (ஸல்) அவர்கள், அப்பூரணச் சந்திரனை நோக்கி தமது விரலைக்கொண்டு குறுக்காக சமிக்ஞை காட்டினார்கள். உடனே அந்தச்சந்திரன் இரண்டு துண்டுகளாகப் பிளந்து, ஒன்று அப்பக்கத்து

மலைக் கப்பாலும் மற்றொன்று இப்பக்கத்து மலைக்கிப்பாலும் சென்று விழுந்து மறைந்து விட்டன.

இந்த மகத்தான அதிசயச் செயலாகிய முஃஜிஸாவைக் கண்டு, குறைஷ் அரபுகளில் அநேகர், ஈமான் கொண்டு, இஸ்லாத்தில் சேர்ந்து முஸ்லிம்களானார்கள். ஒரு சில வன்னெஞ்சக் காபிர்கள் "ஓ, இது மந்திரவாதியின் மாயச்செயல்; இதை நம்ப முடியாது; முஹம்மதுக்கு ஜால வித்தையும் தெரியும் போலிருக்கிறது" என்று ஏளனமாகச் சொல்லி விட்டுப் போனார்கள்.

அவர்களுடைய பாக்கியத்தில் இஸ்லாத்தின் மெஞ்ஞானம் கிடைக்கவில்லை. இது ஒரு முஃஜிஸா.

மறையும் சூரியன் திரும்பி வந்தது.

ஒரு முறை, வெளிப்பிரயாணத்தில், நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள், மாலை அஸர் தொழுகைக்குப் பிறகு, உடல் சோர்ந்து அசதியாக இருந்ததால், தமது மருகராகிய இளைஞர் ஹஜ்ரத் அலி (ரலி) அவர்களுடைய மடியில் தலையை சாய்த்து சிறு தூக்கம் புரிந்து இளைப்பாறிக் கொண்டிருந்தார்கள். அப்போது ஹஜ்றத் அலி (ரலி) அஸர் தொழவில்லை என்பதை, நாயகம் (ஸல்) அவர்கள் மறந்து விட்டார்கள். அதை ஹஜ்ரத் அலி (ரலி), நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கட்கு ஞாபகப்படுத்தவும் இல்லை.

இப்படியாகச் சிறிது நேரம் செல்லவே, சூரியன் அஸ்தமித்துக் கொண்டிருந்தது. அப்போது நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள், இளைப்பாறி துயில் நீங்கி எழுந்தார்கள். ஹஜ்ரத் அலி (ரலி)யை நோக்கி "அலியே, நீவிர் அஸர் தொழுது விட்டீரா?" என்று கேட்டார்கள். அதற்கு ஹஜ்ரத் அலி (ரலி) "நாயகமே, நான் இன்னும் தொழவில்லை; சூரியனும் அஸ்தமித்து விட்டது. வேளை தவறி விட்டதே, என்ன செய்வேன்" என்று வருந்தினார்கள். அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், "நண்பரே, ஆண்டவன் மகாப் பெரியவன். அவன் நாடினால் எதுவும் நடக்கும்" என்று சொல்லிவிட்டு, எல்லாம் வல்ல இறைவனிடம் கையேந்தி "ஆண்டவனே, இந்த எளிய அடியார், உன்னுடைய பாதையில், தன் திரு நபிக்காக பணிவிடை புரிந்து கொண்டிருந்தார்; எனவே இவரது தொழுகை தவறிவிட்டது. உன் மகிமையால் சூரியன் திரும்பிவந்து அஸர் நேரத்தில் இருந்தால், இவர் தொழுதுக் கொள்வார்" என்று துஆ வேண்டினார்கள்.

"என்ன ஆச்சரியம், ஸுப்ஹானல்லாஹ்! அன்று அஸ்தமித்து மறையும் தருவாயிலிருந்த சூரியன், நபிபெருமானார் (ஸல்) அவர்கள் வேண்டுதல் பிரகாரம், திரும்பி வந்து அஸர் நேரத்தில் இருக்க வேண்டிய ஸ்தானத்தில் இருந்து விட்டது. ஹஜ்ரத் அலி (ரலி,)

அஸர் தொழுகையை திருப்தியோடு நிறைவேற்றினார்கள். பிறகு சூரியன் மறுமுறை அஸ்தமித்து விட்டது" என்று ஹஜ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களின் திருக்குமாரியாகிய ஹஜ்ரத் அஸ்மா (ரலி), தாம் கண்ட இவ்வதிசயத்திற்கு சாக்ஷியம் கூறி யிருக்கிறார்கள்.

யுத்த களத்தில் நிகழ்ந்த விந்தை.

(1) பத்ரு மைதானத்தில், காபிர்களுடன் முஸ்லிம்களின் கடுமையான யுத்தம் நடந்து கொண்டிருந்தது. நபித்தோழர்களில் ஒருவரான ஹஜ்ரத் அக்காஷா (ரலி) யும் அப்போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார். போர் நிகழ்ந்து கொண்டிருந்த சமயத்தில், அக்காஷாவுடைய வாளாயுதம் முறிந்துப் போய் விட்டது. அருகில் இருந்த நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், உடனே ஒரு மரக்கழியை எடுத்துக் கொடுத்தார்கள். அது அக்காஷாவுடைய கரத்தில், கூர்மையான பளபளப்புள்ள வாளாயுதமாக மின்னியது. அதைக் கொண்டு அவர், அப்போரில் அநேக எதிரிகளை வெட்டி மடியச் செய்தார். அந்த வாளுக்குப் பெயர் 'அவ்ன்' என்பதாகும்.

(2) உஹத் யுத்த களத்திலும் இப்படியே ஒரு அற்புதம் நிகழ்ந்தது. போர் மும்முரமாய் நடந்து கொண்டிருந்த போது, அப்துல்லாஹ் பின் ஹஜஷ் (ரலி) என்பவருடைய வாளாயுதமும் முறிந்துப் போய் விட்டது. அப்போது, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அருகே யிருந்த ஈச்சமரத்திலிருந்து ஒரு கிளைப் பட்டையை எடுத்துக் கொடுத்தார்கள். அதை வைத்துக் கொண்டு அப்துல்லா (ரலி), எதிரிகள் மீது புலிப்போல் பாய்ந்து போரிட்டுக் கொண்டிருந்தார். அந்த ஈச்சமட்டை தங்க வாளாயுதம் போல் பளபளப்பாக மின்னிக் கொண்டிருந்தது. அநேக எதிரிகளை அவர் அதனால் வெட்டி வீழ்த்தினார்.

(3) ஹஜ்றத் ஹபீப் (ரலி) என்ற ஸஹாபியும் ஒரு சமயம், ஜிஹாத் என்னும் போரில் ஈடுபட்டிருந்தார். பகைவர்களை எதிர்த்துப் போரிட்டார். அப்போது எதிரியுடைய கத்தியினால் வெட்டுப் பட்டு, இவரது புஜம் துண்டித்துப் போகும் நிலையில் தொங்கிவிட்டது. அவர் கையை தூக்க முடியாமல், நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களிடம் வந்து முறையிட்டுக் கொண்டார். உடனே திருநபி (ஸல்) அவர்கள், வெட்டுப் பட்ட அந்த புஜத்தைத் தடவிக் கொடுத்து, தங்களுடைய வாயின் உமிழ் நீரை அந்த காயத்தில் தடவி, ஓதி ஊதினார்கள். உடனே அந்த வெட்டுண்ட கரம் சேர்ந்துக் கொண்டது. உதிரம் நின்று காயமும் சவுக்கிய மடைந்து விட்டது. உடனே ஹஜ்றத் ஹபீப் (ரலி) எழுந்து, சுறுசுறுப்புடன் யுத்தகளத்தில் பாய்ந்து முன்னிலும் உற்சாகமாக, காபிர்களை எதிர்த்துப் போரிட்டார். அந்த கரத்தாலேயே அநேக காபிர்களின் உடலங்களை வெட்டி சாய்த்தார்.

இறந்தவள் உயிர் பெற்றுப் பேசினுள்.

லோக தயாளர் நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள், ஒரு குறைஷ் தலைவனை, இஸ்லாத்தில் வருமாறு வேண்டிக் கொண்டார்கள். அதற்கந்த காபிர்த் தலைவன், 'ஏ முஹம்மதே! தாங்கள் ஆண்டவனுடைய நபி என்பது உண்மையானுல், கொஞ்ச நாளைக்கு முன் இறந்து போன என் அருமை மகளை, மீண்டும் உயிர்ப்பித்து வைத்தாலல்லாமல் நான் ஈமான் கொள்ள மாட்டேன்' என்று சொன்னுன்.

அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சம்மதித்து, அக்காபிரை நோக்கி, 'சரி அப்படியே ஆகட்டும். என்னை உன் மரித்த மகளுடைய கப்ருக்கு அழைத்துப்போ' என்று கூறினுர்கள்.

அங்ஙனமே காபிர்த் தலைவன், நபிப்பெருமானுர் (ஸல்) அவர்களை ஒரு பிணப் புகைக் குழியருகில் அழைத்துப் போனுன். இந்த அற்புதத்தைக் காண்பதற்கு பிற ஜனங்களும் அநேகர் வந்திருந்தார்கள்.

அப்போது, நபிகணுதர் (ஸல்) அவர்கள் அந்தப் பெண்ணுடைய கப்ரை நோக்கி "ஏ பெண்ணே, ஆண்டவன் உத்தரவால், நீ மீண்டும் உயிர் பெற்று எழுந்து வா" என்று கட்டளை யிட்டார்கள். உடனே அந்தக் கபரின் மண் பிளந்து, சில நாட்களுக்கு முன் மரித்துப் போன பெண், உயிர் பெற்று எழுந்து நின்று "அல்லாஹுடைய நபியே! எனக்கென்ன! உத்தரவு?" என்று கேட்டு தாழ்மையுடன் வேண்டினுள்.

அதற்கு நபிகள் பெருமானுர் (ஸல்) அவர்கள் "பெண்ணே, நீ மீண்டும் உலக வாழ்வை விரும்புவாயானுல், உன் தகப்பனுருடன் வீட்டுக்குப் போகலாம்" என்று சொன்னுர்கள்.

அதற்கு அப்பெண் உருவம் "நாயகமே, லோக தயாளரே, அல்லாஹ்வுடைய திருச்சன்னிதானத்தைக் கண்ட பின் நான் உலக வாழ்வுக்குத் திரும்பிவர இஷ்டப்படவில்லை. என் தாய் தந்தையை விட, ஆண்டவன் ஆயிரம் பங்கு அன்புடையவனுக யிருக்கிறுன். இகலோகத்தைவிட பரலோகமே எனக்குப் பிரியமா யிருக்கிறது. எனக்கு உலக வாழ்வு வேண்டாம்" என்று வாய் திறந்து சொல்லி விட்டு, மீண்டும் கப்ருக்குள்ளவே மறைந்துப் போய் விட்டாள்.

இந்த அற்புதத்தால் அந்தக் காபிர்த் தலைவன், ஈமான் கொண்டு முஸ்லிமானுன். வேடிக்கை பார்க்க வந்த காபிர்களும் பலர், மனம் மாறி நபிகள் பெருமானுர் (ஸல்) அவர்களை, தெய்வ சக்தியுள்ளவர் என நம்பி ஈமான் கொண்டார்கள்.

இதோபதேசம்

இதேபோல், இன்னும் எத்தனையோ முஃஜிஸாக்கள் என்னும் அற்புதச் செயல்கள், நபிகள் பெருமானுர் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்

களின் ஜீவியத்தில் நிகழ்வுற்றுள்ளன. பதீக் பின் அம்ரு என்ற குருடருக்கு நபிகள் நாயகம் (ஸல்) மீண்டும் கண் பார்வையை அளித்துள்ளார்கள். தம் விரல் முனையிலிருந்து தண்ணீர் சொரியச் செய்து, ஜனங்களின் தாகத்தை தீர்த்துள்ளார்கள். சில பேருக்கே போதுமான உணவைக் கொண்டு, நூற்றுக் கணக்கானவர்களின் பசியைப் போக்கியிருக்கிறார்கள்.

சிறுவர்களே! எல்லாம் வல்ல இறைவன், தனது அருமைத் திருநபிக்கு உலகத்தின் எல்லாப் பொருட்களும் பணியும் படியான சக்தியை அருள் புரிந்தான். அதை, நபியவர்கள் (ஸல்) சமயம் போல் பிரயோஜனப் படுத்தினார்கள். அது தான் முஃஜிஸாத் என்னும் அற்புதங்கள்.

இக்காலை தெய்வ பக்தியில்லாத சிலர், "இதெல்லாம் நடக்கக் கூடியதா?" என்று விதண்டா வாதம் செய்கிறார்கள். ரேடியோ, கம்பியில்லாத் தந்தி, தூரதிருஷ்டி டெலிவிஷன், டெலிபோன், மின்சார சக்தி, ஆட்டம்பாம் முதலியவை நம்பும் இவர்கள், முஃஜிஸாக்களை ஏன் நம்பக் கூடாது? மூளையில் ஏறவில்லை போலும்!

ஹஸ்ரத் ஷய்க் பூஅலி கலந்தர் அவர்களின் சரித்திர சுருக்கம்

இந்த புஸ்தகத்தில் ஹஸரத் ஸெய்க் பூஅலி கலந்தர் ஷர்புத்தீன் பானிபத்தி (ரஹ்) அவர்கள் பிறந்ததும், அவர்கள் நகர வாசத்தை வெறுத்து காடுகளிலும் மலைகளிலும் குகைகளிலும் போய் இறைவனது தியானத்தில் மூழ்கியதும், அவர்களுக்கு முர்ஷித் (குரு) ஹஸ்ரத் ஸெய்யிதினா ஆஷிக் குதா (ரஹ்) அவர்களின் தரிசனம் வாயப் பெற்றதும், அவர்களின் மகத்தான கராமத்துகளும், அவர்களின் வபாத்தும், அவர்கள் பேருக்கு ஓதப்படும் "ஸெஹமனி பாத்திஹா"வின் விபரமும் அடங்கி யுள்ளது. இதன் விலை அணா 4

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

காஜா நிஜாமுத்தீன் ஔலியா அவர்களின் ஜீவிய சரித்திரம்.

(அய்யம்பேட்டை, S. அப்துல் ரஜாக் ஸாஹிப்)

(3-வது பகுதி)

ஔலியா அவர்களுக்கு அவ்வித விருப்பம் ஏற்பட்ட மறு தினமே ஷய்க் நூருத்தீன் மலிக் என்ற பெரியார் குதிரை மேலேறி வந்தார். அவர் வந்ததும் ஹஸ்ரத் ஔலியா விடத்தில் "நேற்று இரவு என் பீர் (குரு) ஆகப்பட்டவர்கள் 'உன்னிடத்தில் உள்ள கோடி யான் (பெட்டைக் குதிரைகள்) யாவும் நிஜாமுத்தீனுக்குக் காணிக்கை யில் கொடுத்து விடு, ஏனெனில் ஜும்மா தொழுகைக்காக 'கேலுகடி' என்ற ஸ்தலத்திற்கு அவர் நடந்து போக வேண்டி யிருக்கிறது' என்று கட்டளை யிட்டிருப்பதால், தாங்கள் நான் கொண்டு வந்திருக்கும் குதிரைகளை யாவும் ஒப்புக் கொள்ளுங்கள்" என்று கேட்டுக் கொண்டார்கள்.

ஷய்க் நூருத்தீன் அவர்கள் வேண்டுகோளை செவியுற்ற ஹஸ்ரத் நிஸாமுத்தீன் ஔலியா அவர்கள் "சரிதான். நீங்கள் உங்கள் குரு அவர்களின் உத்தரவின்கீழ் குதிரைகளை எனக்கு கொடுக்க வந்திருக் கிறீர்கள். அவைகளை நான் ஒப்புக் கொள்ளலாமா என்பது பற்றி நானும் என் குருவின் உத்திரவை பெற வேண்டாமா?" என்று கூறி சற்று காலதாமதம் செய்யுமாறு கோரினார்கள்.

அதே நாள் இரவு ஹஸ்ரத் ஔலியா அவர்களுக்கு அவர்கள் பீர் ஷய்க் பரீதுத்தீன் சொப்பனத்தில் தரிசனமளித்து "ஷய்க் நூருத்தீன் என்னுடைய முரீது. நான் தான் அவருக்கு குதிரைகளை உமக்கு கொடுத்து வருமாறு ஆக்ஞாபித்தேன்" என அறிவித்ததின் பேரில் ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஔலியா அவர்கள் குதிரைகளை சந்தோஷத் துடன் ஏற்றுக் கொண்டார்கள்.

'அக்பாரே ஔலியா' என்ற கிதாபில் வரையப் பட்டிருக்கிறது:— சுல்தான் அலாவுத்தீன் கில்ஜி காலமானதற்குப் பின், சுல்தான் குத்புத் தீன் முபாரக்ஷா டில்லி சிம்மாசனத்தில் அமர்த்தப் பட்டார். 1316-வது ஆண்டில் அவர் சிம்மாசனத்தை யடைந்தவுடன், அலாவுத் தீன் குமாரராகிய கிஸர்கானை படுகொலைக் குள்ளாக்கினார். கிஸர்கான் ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஔலியா விடத்தில் முரீது பெற்றிருந்தவர். ஹஸ்ரத் ஔலியாவுக்கு பல்வேறு கஷ்டங்களை விளைவிக்க வேண்டு மென்பதே குத்புத்தீன் முபாரக்ஷாவின் நோக்கம்.

ஆனுலோ, அவரது மந்திரி மார்களும், படையினர்களும் பெரும் பாலும் ஔலியா அவர்களின் முரீதுகளாகவும் அவர்களது உண்மை விசுவாசிகளாயும் இருந்து வந்த படியால் பாதுஷாவின் கெட்ட எண்ணம் நிறைவேறவில்லை.

நிற்க, காஜி முஹம்மத் கஸ்னவி என்பவர், பாதுஷாவுக்கு பிரத்யேக ஆலோசகராக இருந்து வந்தவர். அவரிடத்தில் ஒரு நாள் பாதுஷா, "ஷய்க் நிஜாமுத்தீன், ஏராளமாய் செலவு செய்கிருரே அவர் செலவுகளுக்காக பணம் எங்கிருந்து கிடைக்கிறது?" என்று விசாரித்தார்.

காஜிக்கு அந்தரங்கத்தில் ஔலியா பால் அசந்தோஷ மேற்பட்டிருந்ததால் "நிஜாமுத்தீனுக்கு நம் பிரமுகர்களும், சிப்பாய்களுமே பண உதவி செய்து வருகிருர்கள். அதிலிருந்து அவர் தாராளமாய் செலவு செய்து வருகிருர், அவர் சமையல் செலவிலேயே தினசரி நூற்றுக் கணக்கில் ரூபாய் செலவாகிறது" என்று திரித்துக் கூறினர்.

பாதுஷாவுக்கு தம் ஆலோசகரின் பதிலைக் கேட்டு பொருமை அதிகரித்தது. அதையடுத்து அவர் "இனி ஷய்க் நிஜாமுத்தீன் என்பவருக்கு நம் தர்பாரைச் சேர்ந்த யாராவது ஏதேனும் பொருளுதவி செய்வதாகத் தெரிந்தால், யாம் அவர்களின் உபகாரச் சம்பளத்தை நிறுத்தி விடுவோம். இன்னும், அவர் ஜாகைக்கு ஒருவரும் செல்லக் கூடாது. நம் கட்டளையை மீறிச் செல்பவர்கள் தங்கள் ஜாகையை வேறெங்கேனும் தேடிக் கொள்ள வேண்டும்" எனக் கட்டளை பிறப்பித்தார்.

பாதுஷா, பிறப்பித்துள்ள தடை உத்தரவின் செய்தி ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஔலியா அவர்களின் செவிகளுக்கு எட்டியது. அதே சமயம் அவர்கள் தம் ஊழியரான காஜா இக்பால் என்பவரை கூப்பிட்டு "நீர் இன்று முதல் எல்லாவித செலவுகளையும் இரு மடங்காக அதிகப்படுத்திக் கொள்ளும். பணம் வேண்டிய போதெல்லாம் இன்ன மாடத்தில் "பிஸ்மில்லா"வை ஓதி விட்டு கை போட்டு எடும்; உமக்கு எவ்வளவு பணம் தேவைப்படுமோ அவ்வளவும் கிடைத்து விடும்" என்று உத்தர விட்டார்கள்.

காஜா இக்பால் என்பவர் ஹஸ்ரத் ஔலியா அவர்களின் முரீது, கலீபா, தோழர், சமையல் வேலைக்காரர், விலைக்கு வாங்கப்பட்ட அடியார் ஆக இத்தனை அம்சங்களையும் ஒருங்கே வாய்ப்பெற்றிருந்தார். அந்த உத்தரவிற் கேற்ப, காஜா இக்பால், அன்று முதல், செலவுகளை யாவும் இரட்டிப்பாக அதிகரித்து நடத்தினர்.

பாதுஷா உடைய தடை உத்தரவுக்குப் பின், தர்பாரைச் சேர்ந்த ஒருவராவது ஔலியா அவர்களின் ஆச்சிரமத்திற்கு போகாம லிருந்து

வருகையிலும் அங்குள்ள செலவுகள் யாவும் முன்னை விட இரட்டிப் பாகி விட்டன என்பதை கேள்வியுற்ற பாதுஷாவுக்கு பெரும் ஆச்சரிய முண்டாயிற்று. அப்போது அவர் அதற்கான வருமான ரகசியத்தை விசாரிக்க முயன்றார்.

ஹஸ்ரத் ஒளலியா அவர்களின் உத்தரவின் பலனாக பணம் ஏதோ மாயமான விதத்தில் மாடத்திற்குள்ளிருந்து கிடைப்பதாகத் தெரியவே பாதுஷாவுக்கு வெட்கத்தால் தலை குனிய நேர்ந்தது. ஆனால், அவ்வாறு வெட்க மடைந்த பின்னரும், அவர் சும்மா யிருந்து விடவில்லை. உடனே மந்திரி யொருவரை தேர்ந்தெடுத்து "ஷய்க் ருக்னுத்தீன் என்ற மஹான் என்னை கண்டு கொள்ள வருஷத்திற் கொரு முறை 'முல்தான்' என்னும் ஊரிலிருந்து என்னிடம் வந்து போகிறார். நீரோ வெனில், டில்லியில் வசித்துக் கொண்டிருக்கை யிலும் என்னை எட்டிப் பார்க்காம லிருக்கிறீர், இது நினைக்கும்போ தெல்லாம் எனக்கு பெரிய அவமானத்தை தரத்தக்க சங்கதி யல்லவோ?" என்று அவர் வாயலாக செய்தி அனுப்பி வைத்தார்.

ஹஸ்ரத் ஒளலியா அதைக் கேட்டதும் அதே தூதர் வாயலாக "பீர்மார்கள் (குருக்கள்) பிரமுகர்களின் இருப்பிடத்திற்கு போதல் வழக்கமில்லை. மன்னிக்க வேண்டும்" என்ற பதிலை சொல்லி யனுப்பி வைத்தார்கள்.

தூதர் மூலம் அவ்வித துண்டித்த பதிலை கேட்ட பாதுஷா விசேஷ ஆத்திர மடைந்தார். அதன் பின், இரண்டாவது தடவை யாக "என் கட்டளைக்கு நீர் கீழ்ப்பட்டே தீர வேண்டும்" என்று பாதுஷா சொல்லி யனுப்பினார்.

அதன் மேல், ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஒளலியா அவர்கள், ஷய்க் அலி சஞ்சரீ அவர்களை ஷய்க் ஜியாவுத்தீன் ரூமி அவர்களிடத்திற்கு அனுப்பி வைத்தார்கள். (ஜியாவுத்தீன் ரூமி என்பவர் பாதுஷாவின் முர்ஷிதும், ஷய்க் ஷஹாபுத்தீன் சுஹர்வர்தியின் கலீபாவும் ஆவர்)

"பாதுஷா பகீர்களை இம்சித்து வருவதனால் அவருக்கு யாதொரு பலனும் கிடைக்காது. அவரை அவ்வண்ணம் செய்யாம லிருக்குமாறு தடுத்து விடுங்கள்" என்ற செய்தியே ஒளலியா சொல்லி யனுப்பி னார்கள். ஆனால் மேற் சொன்ன தூதர் ஷய்க் அலி சஞ்சரி, "சஞ்சர்" ஸ்தலத்தை யடைந்த போது, ஷய்க் ஜியாவுத்தீன் ரூமி கவலைக்கிட மான நிலைமையில் நோவுற்றிருந்தமையால் போனவர் திரும்பி வந்து ஹஸ்ரத் ஒளலியாவுக்கு தகவல் கொடுத்தார்கள்.

அடுத்த மூன்றாவது தினமே ஷய்க் ஜியாவுத்தீன் காலமானார், அவரை டில்லியிலேயே நல்லடக்கம் செய்யப்பட்டது.

காலமானவரின் பாத்திஹா வைபவத்தில், சகல பிரமுகர்களும் மஷாயக்மார்களும் சுல்தான்களும் ஒன்று கூடியிருந்தார்கள்.

அச்சமயம் ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஔலியா மஹ்பூபே இலாஹி அவர்களும் புறப்பட்டுப்போனபோது சபையோர் அனைவரும் மரியாதைக்காக எழுந்து நின்று சலாம் செய்து வரவேற்றார்கள். ஆனால் அச்சபையில் பாதுஷாவும் வந்திருந்தாராயினும் ஔலியாவை பார்க்காததுபோல் அங்கே நடந்த காரியங்களை யெல்லாம் கவனித்துக்கொண்டு ஏதோ தாம் குர்ஆன் திலாவத்தில் ஈடுப்பட்டிருப்பவரைப்போல் திருக்குர்ஆனை திறந்துவைத்து அதை உற்றுநோக்கிக் கொண்டிருந்தார்.

சபையோர் யாவரும் எழுந்திருந்து ஹஸ்ரத் ஔலியா அவர்களுக்கு மரியாதை செய்த முறையும் அவர்களை வரவேற்றின விதமும் பாதுஷாவின் பொறாமையையும் ஆத்திரத்தையும் மென்மேலும் அதிகரிக்கச் செய்தன.

இது நிற்க, அச்சமயம் சபையினர்களுள் சிலர் ஹஸ்ரத் ஔலியாவிடத்தில் "அதோ பாருங்கள் பாதுஷாவும் வந்திருக்கிறார். தாங்கள் போய் அவருக்கு சலாம் செய்து வாருங்கள்" என்று அறிவித்தனர்.

அதற்கு ஹஸ்ரத் ஔலியா அவர்கள் "பாதுஷாவானவர், குர்ஆன் திலாவத்தில் ஈடுப்பட்டிருக்கிறார். இச்சமயத்தில் அவருக்கு இடைஞ்சல் செய்வது சரியல்ல; இவ்வேளை சலாம் சொல்லாமற்போனால் பாதகமில்லை" என்று விடை பகர்ந்தார்கள். பாத்திஹா வைபவ சபையின் அலுவல்கள் யாவும் முடிவுற்று அவரவர்கள் தத்தம் வீடுகளுக்கு திரும்பிப்போன பின்னர், பாதுஷா, சகல உலமாக்களையும் மஷாயக்மார்களையும் அழைப்பித்து ஓர் ஆலோசனை சபை நடத்தினர். அச்சபையில் முற்றிலும் நிஜாமுத்தீன் போக்கைப்பற்றியே பாதுஷா கண்டித்துப் பேசினர்.

இறுதியாக, பாதுஷா நிறைவேற்றிய தீர்மானம் என்னவெனில்:— "பெரியார்களே! நிஜாமுத்தீன் என்னைப் பார்க்க அனுதினமும் என்னிடம் வரவேண்டும், அனுதினம் வரமுடியாவிட்டால் வாரத்திற் கொருமுறை வரட்டும்; அப்படியும் முடியவில்லையாகில், ஒவ்வொரு மாதத்தின் புதிய பிறையன்று என்னிடம் வந்து எனக்கு ஆசி கூறி விட்டுபோக வேண்டும். இவ்வாறான என் உத்தரவை நீங்கள் அவர்களுக்கு மனதில் படும்படியாக எடுத்துக்கூறி சமாதானப் படுத்துங்கள்."

"நீங்கள் என் உத்தரவைப்பற்றி அவருக்கு விளக்கமாய் அறிவித்த பின்னரும் அவர் மேற்பட்டு ஏதேனும் சொல்லுவாராகில் அவர் சொல்லப்போவதை எனக்கு உள்ளவாறே கூறுங்கள். மேற்கொண்டு என்ன செய்யவேண்டும் என்பதைக் குறித்து நான் ஏற்பாடு செய்து கொள்ளுகிறேன்"

பாதுஷா மேற்கூறிய விஷயத்தை சபையோருக் கெதிரில் பொதுவாக சொல்லி விட்டதற்குப் பிறகு சையத் குத்புத்தீன் கஸ்னவி, ஷய்க் இமாமுத்தீன் தூஸி, ஷய்க் வஜ்ஹுத்தீன் புர்ஹானுத்தீன் (இப்பெரியார்கள் டில்லியிலேயே அடக்சமாயிருக்கிறார்கள்) ஆகியோரை தம் கட்டளையை அறிவிக்கும் பொருட்டு ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஔலியாவிடத்திற்கு அனுப்பிவைத்தார்.

அவர்கள் ஔலியாவிடத்திற்கு வந்து பாதுஷா கட்டளையை பின்வருமாறு எடுத்துரைத்தார்கள்:—

"அஸ்ஸலாமு அலைக்கும் ஹஸ்ரத் அவர்களே! தங்களுக்கு பாதுஷா எங்கள் மூலமாய் அனுப்பியுள்ள உத்தரவு யாதெனில், தாங்கள் ஒவ்வொரு நாளும் அவரிடம்போய் அவரை முலாகத்துசெய்து வர வேண்டும், ஒவ்வொரு நாளும் போக முடியாவிட்டால் ஒருவாரத்திற்கு ஒரு தடவையாவது அவரிடம் போய்வரவேண்டும். அவ்வாறு போய் வருவதற்கும் சௌகரியமில்லையாகில் பிரதி மாதத்தின் பிறை நாளில் அவரைக்கண்டு ஆசிர்வதித்து வரவேண்டும்" என்பது

"தாங்கள் அவரை திருப்தி செய்யும் வழியில் அவரின் உத்தரவுக்கிணங்கபோக வர இருந்தால்தான் தங்களுக்கும் நன்மையுண்டு என்பது எங்களினதும் ஆலோசனை; இல்லையேல், அவர், தங்கள் விஷயத்தில் சதியாலோசனை செய்வார்போல் தெரிகிறது. இது எங்கள் சொந்த ஆலோசனையாகும்"

ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஔலியா அவர்கள், யாவற்றையும் கேட்ட பின்பு சற்று நேரம் தாமதித்ததும் "இன்ஷா அல்லா" என்ற ஒரே பதிலை மாத்திரம் சொல்லிவிட்டார்கள்.

ஔலியா அவர்களின் 'இன்ஷா அல்லா' பதிலைக்கேட்ட தூதுவக்கோஷ்டியினர், ஹஸ்ரத் ஔலியா பாதுஷாவின் உத்திரவிற்கிணங்க, நடந்து கொள்வதற்கு சம்மதித்துவிட்டார் என்றெண்ணி மிக்க சந்தோஷமடைந்து, பாதுஷாவிடம் போய், நிஜாமுத்தீன் ஔலியா அவர்கள், தங்கள் உத்திரவுக்கு இணங்கி விட்டார்கள் என்று தெரிவித்ததைக் கேட்ட பாதுஷாவுக்கும் பெரும் மகிழ்ச்சி ஏற்பட்டது.

இந்த நிகழ்ச்சியானது ஸபர் மாதம் 27ந் தேதி நடந்தேறியது. அன்றே, (1) காஜா வஹீத்குரைஷி (2) ஹஸ்ரத் அமீர் குஸ்ரு அவர்களின் சகோதரரான ஏஸுத்தீன், இவ்விருவரும் ஔலியா அவர்களின் சமுகத்தில் ஆஜராகி "ஷய்க் அவர்களே! தாங்கள் பாதுஷாவைகண்டு கொள்ளப்போவதற்கு இணங்கி விட்டதாக நாங்கள் கேள்வியுற்றோம், அது வாஸ்தவமா?" என்று கேட்டதற்கு

"நான் என்பீர்மார்கள் (குருக்கள்) உத்தரவுக்கு மாருக நடந்து கொள்ள முடியாது" என்று பதிலளிக்கவே, வினவியர்கள் திகைத்து விட்டார்கள்.

மேலும் அவர்கள் "இதென்ன அதிசயம்! உண்மையோ இப்படி இருக்க, அங்கே பாதுஷாவோ ஔலியா அவர்களின் தரிசனைக்கு காத்துக்கொண்டிருக்கிறுர்; இவர்களோ போகமாட்டார்கள் எனத் தெரிகிறது. இது பற்றி இனி கிளர்ச்சி ஏற்படக் கூடுமோ" என்று நினைத்து வருந்தினுர்கள்.

உடனே ஹஸ்ரத் ஔலியா அவர்கள் அந்த இருவர்களுக்கும் 'நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படவேண்டாம். பாதுஷா என்னை வெல்ல முடியாது' என்றுர்கள்.

ஸபர் 29ந் தேதி வந்தது. ஹஸ்ரத் ஔலியா அவர்களின் ஊழியரான காஜா இக்பால் ஹஸ்ரத் ஔலியா அவர்கள் சமுகத்திற்குச் சென்று "ஹஸ்ரத்! தாங்கள் பாதுஷாவின் மூலாகத்திற்கு, போக வேண்டியிருக்கிறதே, தங்களுடன் கொண்டுபோவதற்கு ஏதேனும் காணிக்கைப் பொருள்கள் வேண்டியிருப்பின் சொல்லுங்கள், நான் அவைகளை விலைக்கு வாங்கி வருகிறேன்" என்று முறையிட்டார்.

அதைக்கேட்ட ஹஸ்ரத் ஔலியா அவர்கள் "தாமதியும், அஸ்ரு தொழுகை நேரம் ஆகட்டும்" என்று சொன்னுர்கள்.

ஹஸ்ரத் ஔலியா அவர்கள் சொன்ன பிரகாரமே காஜா இக்பால், அஸ்ரு நேரங்கழித்து மறுபடியும் போய் கேட்டபோது, ஹஸ்ரத் எத்தகைய பதிலும் அவருக்குச் சொல்லாமலிருந்து விட்டபடியால், ஹஸ்ரத் அவர்கள் பாதுஷாவைக் கண்டு கொள்ள போகமாட்டார் போலிருக்கிறது என்று காஜா இக்பால் சந்தேகித்தார்.

நெருக்கடியான இவ்வேளையில் எல்லாம் வல்ல இறைவன் செயலும், அரும்பெரும் நாதாக்களுடைய கராமத் (மகிமையும்) பின் கண்ட சம்பவத்திலிருந்து நன்கு வெளியாகிறது. அதாவது இருந்தாற்போலிருந்து அங்கு என்ன சம்பவிக்கப்போகிறது என்பதை கவனிப்போம். ஹஸ்ரத் அவர்களோ போகவில்லை, இரவு அரைஜாமமும் ஆகிவிட்டது.

(தொடரும்.)

தர்த்தீபுஸ்ஸலாத் என்னும் தொழுகையடவு ஹனபி.

(சுத்த தமிழ்)

இரண்டாம் பதிப்பு

வெளிவந்து விட்டது.

இதில் ஐந்து கலிமாக்கள், இஸ்லாத்தின் இயல்பு, ஈமான் நிலை, முழுக்கின் விதிகள், உலூவின் ஸுன்னத்துகள், உலூவின் துஆ, தொழுகையின் பர்ளுகள், தொழுகையின் வாஜிபுகள், பாங்கு, இகாமத்து, பாங்கு துஆ, ஐந்து தொழுகையின் தக்பீர்கள், ஸுன்னத்து தொழுகை தக்பீர், அத்தஹிய்யாத், இஸ்திக்பார், பொதுவான துஆ, ஐந்து தொழுகையின் துஆக்கள், கஸ்ரு தொழுகை, கஸ்ரு தொழுகை தக்பீர், ஜும்ஆ தொழுகை, அதன் தக்பீர், ஸஜ்தா திலாவத், நோன்பின் ஷர்த்து, நோன்பின் நிய்யத்து, நோன்பின் முறிச்சல்கள், நோன்பு திறக்கும் போது ஓதுகிற துஆ, தராவீஹின் விபரம், தராவீஹுடைய தக்பீர், நோன்பு பெருநாள் தக்பீர், ஹஜ்ஜுப் பெருநாள் தக்பீர், தக்பீரு தஷ்ரீகி, மையித்துக்கு செய்யும் முறைகள் ஆகிய இவைகளும் மற்றும் விபரங்களும் அடங்கி இருக்கின்றன. தமிழும் அரபியும் சேர்ந்தது. அரபியை சிகப்பு மையினாலும், தமிழை கறுப்பு மையினாலும் அச்சிடப் பட்டிருக்கின்றது.

இதன் விலை அணா. 4

ஷை அறபுத் தமிழ் விலை அணா. 8

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

நெ. 20, ஹை ரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ், 5.

இரத்தச் சின்னம்

(தொடர் கதை 7—வது பகுதி)

14-வது அத்தியாயம்

ஹட்டன், மாரீஸின் அறையிலிருந்து வெளிவந்து அங்கு இரு பக்கமும் வேலைசெய்து கொண்டிருந்த கிளர்க்குகளைப் பார்த்தார். அவளைக்காணோம். பக்கத்தில் ஒரு சிறிய அறையிருந்தது. அதன் கண்ணாடிக்கதவு சற்று திறக்கப்பட்டிருந்தது. அந்த அறையினருகே வந்து உள் நோக்கினார். உள்ளே குலோரியா உட்கார்ந்திருப்பதைக் கவனித்தார். அந்த அறையின் வெளியே ஒரு பெண், டைப் அடித்துக்கொண்டிருந்தவள், ஹட்டன் அறையினுள் கூர்ந்து கவனிப்பதைப் பார்த்தாள்.

குலோரியா தான் செய்யும் வேலையினின்றும் நிமிர்ந்து வெளியே பார்த்தாள். ஹட்டன் சிறித்துக்கொண்டே "குலோரியா! வேலை அதிகமா?" என்று கேட்டார்.

"ஆம்"

"விடாமல் வேலை செய்வது மிக கஷ்டமாகயிருக்குமே"

"ஆம்.. என்ன செய்வது"

"ஒருநாளைக்கு நல்ல சாப்பாடு சாப்பிட்டுவிட்டு ஸினிமா எங்காவது போனால் நல்லதல்லவா?" என்று கேட்டார்.

அவள் ஹட்டனை உச்சியிலிருந்து உள்ளங்கால்வரை கூர்ந்து பார்த்தாள். "நீரோ கொடிய கிழவராகத் தெரிகிறது. இருந்தாலும் நல்ல சாப்பாடு என்றால் எனக்கு மிக இஷ்டம்" என்று சாந்தமாக பதில் சொன்னாள். அதைக் கேட்டதும் பூரிப்படைந்தான்.

"எந்த ஹோட்டலுக்குப் போகலாம்?" என்று அவசர அவசரமாக கேட்டான்.

"ரிட்ஸ் ஹோட்டலுக்கு போகலாம்" என்று அவள் பதில் சொல்லியதும் இவனுக்கு தலை சுற்றியது. அது மிக பிரக்யாதிபெற்ற ஹோட்டல். அங்குச் சென்றால் பணம் மிக அதிக செலவாகும். இருந்தாலும் என்ன சொல்வதென்று யோசித்தான். பிறகு சமாளித்து

"நீயோ ராணி; உனக்கு அப்பேர்ப்பட்ட ஹோட்டலில்தான் சாப்பாடு அளிக்கவேண்டும். இன்று மாலேயே போகலாமா?" என்று கேட்டான்.

அவள் ஆமோதிக்க "ஸ்பெயின் பிளேஸில் எனது பங்களாவிற்கு $7\frac{1}{2}$ மணிக்கு வந்து விடு. பங்களாவின் முன் எனது பெயர்போடப பட்ட போர்டு தொங்கும்" என்று சொல்லி தனது கைவிரல்களுக்கு ஒரு முத்தம் கொடுத்தான்.

"நீங்கள் போகும்போது கதவை மூடிவிட்டுப் போங்கள்" என்று சொல்லியவாறு தனது வேலேயைக் கவனித்தாள் குலோரியா.

ஹட்டன் கதவை மூடிச்சென்றதும், வெளியே டைப் அடித்துக் கொண்டிருந்த பெண் அறையினுள் வந்தாள். குலோரியாவை ஏறஇறங்க பார்த்துவிட்டு. "தற்போது வந்த கிழவன் யார்?" என்று கேட்டாள்.

"என்பேரில் அன்புடையவர்களுள் ஒருவர்" என்று சட்டென்று விடையளித்தாள்.

"கிழவர்களும் உன்னே விட்டபாடில்லே" என்று பொருமையுடன் சொன்னுள்.

"இதைப்பற்றி கேட்கவா தற்போது வந்தாய்?" என்று கோபத்துடன் குலோரியா கேட்டாள்.

"இல்லே உன்னிடம் முக்கியமான விஷயத்தைப்பற்றி பேச வேண்டும். சென்ற வெள்ளிக்கிழமை பணத்தை வைத்து ரிஜிஸ்டர் கவர் வாட்சன் கம்பெனிக்கு அனுப்பினேமே ஞாபக மிருக்கிறதா?"

குலோரியா தலேயை யசைத்தாள்.

"கவரினுள் பணத்திற்கு பதில் வெறும் காகிதங்கள் யிருந்ததாக சொல்கிருர்களாம்"

"அப்படியா? மாரீஸ் என்னிடம் அதைப்பற்றி ஒன்றுமே சொல்லவில்லேயே" என்று ஆச்சரியத்துடன் குலோரியா சொன்னுள்.

"கவரினுள் பணத்தை நான் வைத்தேன். நீ அதைப் பார்த்தாய் இந்த விஷயத்தில் நாமிருவரும் சம்மந்தப்பட்டுள்ளோம். ஆதலால் நம்மிருவரில் ஒருவர் பணத்தை எடுத்திருக்கவேண்டும். நான் எடுக்க வில்லே என்று சத்தியமாக சொல்வேன்" என்று ஜேன் சொன்னுள்.

"ஓஹோ! அப்படியாகில் நானெடுத்தேனு! ஜேன்! இதைப போல் ஒன்றுமறியாத என் பேரில் பழியை சுமத்தாதே" என்று சிறிது சிறித்தவாறு குலோரியா சொன்னுள்.

அவள் சிறித்ததை ஜேன் பார்த்து "நீ பழைய பேர்வழியாகத் தெரிகிறது. ஒருமாதத்திற்கு முன் அதாவது நீ வந்து ஒரு நூறு பவுண்டு நோட்டும் இங்கு காணேம். பிறகு நீ ஒரு கடையில் நூறு பவுண்டு நோட்டுக்கு சில்லரை மாற்றியதும் எனக்குத் தெரியும். அந்த நோட்டின் நம்பரும் எனக்குத் தெரியும்" என்று ஜேன் சொன்னதும், குலோரியா கோபத்துடன் "போதும், உன்பேச்சை நிற்பாட்டு. இது என்ன போலீஸ் விசாரனையா?" என்று முன்சாய்ந்தவாறு சப்தமிட்டாள்.

"இந்த வாட்ஸன் கம்பெனி சமாச்சாரம் கவனிக்காமல் விடப் போகிறதில்லை. நீ மாட்டிக்கொண்டு விழிப்பாய்"

"நீ மாத்திரம் சம்மந்தப்படவில்லையா! கவரினுள் வைத்தது நீ தானே" என்று குலோரியா திருப்பிச் சொன்னுள்.

"கவரினுள் வைத்தது நான் தான். ஆனல் பணத்தை எடுத்து கொண்டது நீ. சரி குலோரியா தற்போது அதைப் பற்றி ஏன் வாதிக்க வேண்டும். நாம் இருவரும் ஒன்று சேர்ந்து விட்டால் ஒருவருக்கும் தொல்லை வராது. கவரினுள் பணம் வைத்து சில் வைத்ததை நான் பார்த்ததாக சத்தியம் செய்து விடுகிறேன்" என்று ஜேன் சொன்னுள். இதைக் கேட்டதும் குலோரியா சிரித்துக் கொண்டே "சரி இந்த சமாசாரம் முடிந்து விட்டது. எனக்கு ஏதோ ஆபத்து வந்ததாகவும் அதினின்றும் நீ என்னை காப்பாற்றியதாக கருதி ஏதும் பிரதி உபகாரத்தை கோருகிருயா? இந்த பணம் விஷயமாக ஒளிப்பு மறைப்பு இல்லாமல் திறந்து உன்னிடம் சொல்லுகிறேன். நான் தான் பணத்தை எடுத்தேன். எனக்கு பணம் அதிகம் தேவை. ஆனல் தற்போது போஸ்ட்டில் போக கூடிய பணங்கள் அநேகம் தவறி விடுகிறதாக சில நாட்களுக்கு முன் பத்திரிகையில் படித்தேன். ஆதலால் நீ யாரிடம் என்ன சொன்னுலும் என்னை சந்தேகிக்க மாட்டார்கள்" என்று சொன்னுள். இவள் சொல்லியதைக் கேட்ட ஜேன் அப்படியே பிரமித்து விட்டாள்.

"நீ படா கெட்டிக்காரி. இருந்தாலும் இந்த சில்லரை திருடுகளால் ஒன்றும் பிரயோஜனம் அடைய மாட்டாய். திருட்டு தொழிலில் இறங்கினல் ஒரு தடவை செய்தாலும் பெரிய தொகை கைக்கு கிடைக்குமாறு செய்ய வேண்டும். பெரிய திருடு உன்னல் செய்ய இயலாது என்ருல் அதிக ஏற்பாட்டுடன் பெரிய திருடு செய்பவர்களுடன் சேர்ந்து கொள்ள வேண்டும்" என்று ஜேன் சொல்லவே, "ஹோ, ஹோ! நீ அப்பேர்ப்பட்ட கூட்டத்தில் சேர்ந்தவளா! உன்னுடன் சேர்ந்துள்ளவர்கள் யார்?" என்று குலோரியா கேட்டாள்.

137836

"எனக்கு ஒரு மனிதன் தெரியும். அவன் என் சிநேகிதன் தான். அவன் உன்னை சென்ற ஒன்று இரண்டு வாரங்களாக கவனித்து வருகிறான். நீ பெரிய கெட்டிக்காரி என்றும் நீ அவனுடன் சேர்ந்தால் கஷ்டம் இல்லாமல் அதிக பணம் அடையலாம் என்றும் என்னிடம் சொன்னான். உன்னைக் கண்டு பேச வேண்டும் என்றும் சொன்னான்" என்று ஜேன் சொன்னாள். "என் பேரில் ஆசைப்பட்டு அவ்வாறு சொல்லி இருக்கலாம்" என்று குலோரியா பிரதி சொன்னாள்.

"அவ்வாறு ஒன்றும் இல்லை. அவனுக்கும் எனக்கும் கல்யாணம் செய்ய ஏற்பாடு எல்லாம் ஆகி விட்டது." என்று ஜேன் பதறி சொன்னாள்.

"ஐயோ பாவமே! உங்கள் இருவர்களுக்குள்ள காதலின் நடுவில் நான் நுழைந்து பிரிப்பது உசிதமில்லை என்று எண்ணுகிறேன்." என்று மிக நல்லவள் போல் பாசாங்கு செய்து சொன்னாள் குலோரியா.

"குலோரியா! நான் சொல்லும் விஷயத்தில் காதல் அன்பு இவைகளுக்கு இடமும் இல்லை, நேரமும் இல்லை. பணம் சம்பாதிக்க வழி தான்" என்று முகம் சிவக்க ஜேன் சொன்னாள். குலோரியா தனது கையில் ஒரு பென்சில் வைத்து சுற்றிக் கொண்டே "எனக்கு உங்கள் கூட்டத்தில் சேர இஷ்டம் இல்லை யாகில்?" என்று கேட்டாள்.

ஜேனுக்கு குலோரியாவின் பேரில் ஒருவித சந்தேகம் ஏற்பட்டது. இருந்தாலும் அதை மறைத்தவாறு "குலோரியா இன்று மாலை எங்காவது ஹோட்டலில் சாப்பிடலாம். அங்கு நமது சம்பாஷணையை ஆரம்பிக்கலாமே" என்றாள்.

"என்னை நீ விருந்திற்கு அழைக்கிறாயா? அல்லது அவன் அழைக்கிறானா?" என்று குலோரியா கேட்டாள். குலோரியாவுக்கு அவன் பேரில் ஒரு நம்பிக்கை உண்டாக்க, "அவனை பற்றி முழு விஷயம் உனக்குத் தெரியாது குலோரியா. அவனிடம் ஏராளமான பணம் இருக்கிறது. அவனுடன் நீ சேர்ந்தால் ஒன்று இரண்டு வாரத்திற்குள் அருமையான வைர நெக்லஸ் அணிந்து கொண்டு இருப்பாய்" என்று ஜேன் ஆசை ஊட்டியவாறு சொன்னாள்.

"வைரமா! வைரம் என்றால் எனக்கு ரொம்ப ஆசை. இன்று பாங்க் வேலை முடிந்ததும் உன்னை சந்திக்கிறேன்" என்று குலோரியா சொல்லி தனது வேலையை கவனித்தாள். ஜேன் அங்கிருந்து உடனே போகாமல் சிறிது தயங்கி இருந்தாள். பிறகு "குலோரியா நீ இன்று அவனை சந்தித்தால் நான் உன்னிடம் சொல்லி இருந்தேனே எங்களது கல்யாணத்தைப் பற்றி, அதை பற்றி அவனிடம் ஒன்றும் பேசாதே" என்று கேட்டுக் கொண்டாள்.

" ஊர் கதை பேசுவது எனது வழக்கம் அல்ல" என்று குலோரியா தைரியம் சொல்லவே, ஜைன் அவளை விட்டுப் பிரிந்தாள். சிறிது நேரத்திற்கு பின் குலோரியா மாரிஸ் அறைக்கு போகவே, மாரிஸ் அவளிடம் ஒரு ஸீல் இட்ட கவரை கொடுத்து "இதை ஒரு ஆள் மூலமாக உடனே அனுப்பு" என்று சொன்னார். குலோரியா அந்த கவரின் மேல் உள்ள விலாசத்தைப் பார்த்தாள். இரத்த சின்ன சங்கத்தில் சேர்ந்துள்ள அங்கத்தினர்கள் பலவகையானவர்கள் என்று நினைத்து சிரித்தாள்.

15-வது அத்தியாயம்

குலோரியா பாங்கிலிருந்து மற்ற வேலைக்காரர்கள் வெளிவந்த பின் கடைசியாக வெளிவந்தாள். பாங்கின் வாயற்படியில் நின்றும் இருபுறமும் நோக்கினாள். எதிர்பக்கம் ஒருவன் தன்னை கவனிப்பதை யறிந்தாள். இருந்தாலும் அவன் பார்ப்பதை தான் கவனியாதவாறு இன்னொரு பக்கம் பார்த்தாள். சிறிது தூரத்தில் தனது வருகையை எதிர்பார்த்து ஜேன் நிற்பதை கவனித்தாள். உடனே அவளை நோக்கிச் சென்றாள்.

" என்ன குலோரியா! இவ்வளவு நேரம். எனது சினேகிதன் எதிர் பார்த்துக்கொண்டிருப்பானே. அவனுக்கு தாமதம் என்றாலே பிடிக் காது " என்று ஜேன் சொல்ல,

" என்வறையில், நான் இந்த ஆண்கள்வகையில் சொல்லுகிறபடி செய்வதில்லை. என் இஷ்டப்படிதான் வருவேன். உனது சினேகிதனுக்கும் நான் தாமதித்து வருவது பின் தெரிந்து, வழமையாகிவிடும்" என்று குலோரியா பதில் சொன்னாள்.

ஜேன் குலோரியாவுடன் பேசிக்கொண்டே நடந்து ஒரு ஹோட்டலுக்குள் நுழைந்தனர். அங்கு இரவு சாப்பாட்டிற்காக மேஜைகள் எல்லாம் ஒழுங்காக போடப்பட்டு ஏற்பாடாகிக்கொண்டிருந்தது. ஆனால் சாப்பாடு நேரத்திற்கு இன்னும் 2 மணி நேரமிருந்ததால், அங்கு ஜனங்கள் யாருமில்லை. வேலைக்காரர்களைத் தவிர ஹோட்டல் காலியாக தோன்றியது.

அதனுள்ளிருந்த படிக்கட்டின் வழியாக ஜேன் சென்று, முதல் மெத்தையிலிருந்த அறைகளுள் முதல் அறையினுள் சென்றாள். குலோரியாவும் அவளுடனேயே சென்றாள். அவ்வறையில் ஒரு மெலிந்த மனிதன், நல்ல உயர்தரமான உடைகளை அணிந்தவாறு உட்கார்ந்திருந்தான். இவர்களிருவர் வந்ததை யறிந்ததும் எழுந்து " குலோரியா! வாரும் உட்காரும் " என்று உபசரித்தான்.

"இவள்தான் குலோரியா" என்று ஜேன் அறிமுகப்படுத்தினுள்.

"எங்களை ஒருவருக்கொருவர் அறிமுகப்படுத்த வேண்டிய அவசியமில்லை. குலோரியா! உன்னைப்பற்றி எனக்கு அதிகம் தெரியும். எனது பெயர் ஸ்மித்" என்ருன்.

"எனக்கும் உனது பெயர் தெரியும்" என்று குலோரியா சொல்லியதைக் கேட்டு ஆச்சரியமானுன்.

"ஓஹோ! என்னைப்பற்றியும் கேள்விப்பட்டிருக்கிருயா?" என்று கேட்டான்.

"இவளுக்கு எதுதான் தெரியாது? எல்லாம் தெரியும். ஹட்டனும் தெரியும் அவருடன் இன்று சாப்பிடபோகிருள்" என்று ஜேன் சொன்னுள்.

"இவளிடம் எல்லா விஷயத்தையும் தெரிவித்து விட்டாயா?" என்று ஜேனைப் பார்த்து கேட்டான்.

"இவளிடம் சொல்லவேண்டிய தென்னவிருக்கிறது. இவளுக்குத் தான் எல்லாம் தெரியுமே"

"நீ சொல்லிவிட்டாயா?" என்று மறுபடியும் கேட்டான்.

"எதைப்பற்றி? ஹட்டனைப்பற்றியா? நான் சொல்லவில்லை. நீயே சொன்னுல் நலமென்று நினைத்தேன்" என்று ஜேன் பதில் சொன்னுள்.

அவன் உடனே குலோரியாவைப் பார்த்து, "குலோரியா! நான் உன்னிடம் ஒன்றும் மறைப்பில்லாமல் திறந்து பேசப்போகிறேன். உனது நடத்தையோ இதுவரை ஒழுங்கில்லை. அன்று கிரீன் வீட்டில் திருடியதற்கு விசாரணை நடக்கும்போது, நான் உன்னை கோர்ட்டில் பார்த்தேன்" என்ருன்.

"ஓஹோ! நீயும் என் சமாச்சாரத்தை தெரிந்து வைத்திருக்கிருய். தற்போது ஒருவர் செய்ததை மற்றவர் சொல்லி விபரிக்கவா வந்துள்ளோம்" என்று குலோரியா கேட்க "இல்லை. முக்கியமான விஷயம் பேசதான் உன்னை கூப்பிட்டு வரச்சொன்னேன். நாமெல்லாம் ஒரே தொழிலை சேர்ந்த நண்பர்கள். நான் உன்னைப்போல் சிறிய திருடுகளைச் செய்து அவஸ்தைபடுபவனல்ல. என்னுடன் சிலர் சேர்ந்துள்ளனர். நாம் செய்யும் வேலையைப் பொறுத்து அவர்கள் எவ்வளவு பணமும் முன் செலவு செய்ய தயாராயிருக்கின்றனர். நீயோ இதைப்போல் பெரிய வேலைகளில் ஈடுபடாமல் உனது வாழ்க்கையை கெடுத்து வருகிருய். எவ்வளவு நாட்களுக்கு இதைப்போல் சில்லரை திருடு செய்து கொண்டிருப்பாய்? ஆதலால் நான் சொல்வதை கவனமாய்கேள்.

நானும் ஜேனும் பாங்கில் வேலைபார்த்து வருகிறோம். நாம் அடைவதற்கு பணமோ அதிகமுண்டு-எங்கு? பாங்கிலா? இல்லை பாங்க் மானேஜர் மாரீஸ் எனது சிநேகிதர். பாங்கில் பணம் போட்டுள்ள ஆட்களுள் ஒருவரின் மூலம்-அதிகமாக பணம் போட்டுள்ள ஹட்டன்" என்றான்.

இவைகளைக் கேட்டதும் குலோரியா சிறித்துக் கொண்டே "ஆஹா! என்ன யோசனை. உங்கள் ஏற்பாட்டில் முக்கிய அம்சமே தவறு. மாரீஸ் பாங்கில் ஹட்டனின் பணம் ஒரு தம்படியுமில்லை" என்று சாந்தமாக சொன்னாள்.

உடனே ஸ்மித் ஜேனை முறைத்து கோபப் பார்வையுடன் "ஒரு லக்ஷம் பவுண்ட் யிருப்பதாகச் சொன்னயே" என்று கேட்டான்.

"ஆம். இருந்தது" என்று ஜேன் சொன்னாள்.

அதற்கு குலோரியா "ஆம். இன்று காலை வரை யிருந்தது. பிறகு மாரீஸ், பாங்கை விட்டு வெளியே போய் வந்தார். அதற்குப் பின் என்னை கூப்பிட்டார். அவர் முன்னால் மேஜையின் பேரில் புதிய நோட்டு கட்டுகளிருந்தன. அவர் என்னிடம், ஹட்டன் ஒழுங்கானவரல்ல வென்றும், அவருடன் சம்மந்தம் வைத்திருப்பது ஒழுங்கல்ல வென்றும், அவர் கணக்கை முடிப்பதாக சொன்னார். சிறிது நேரத்தில் ஹட்டன் வரவே அவரிடம் பணத்தைக் கொடுத்து விட்டு, அவர் கொடுத்த செக்கை என்னிடம் கொடுத்து, அவர் கணக்கை முடிக்குமாறு சொன்னார்" என்று சொன்னாள்.

"ஹட்டன் உன்னை சாப்பாட்டுக்கு அழைத்தது மாரீஸுக்கு தெரியுமா?" என்று ஜேன் கேட்க தெரியாதென்று தலையை யசைத்தாள்.

இதற்கிடையில் ஸ்மித் தான் நினைத்தது முற்றிலும் மாறிவிடவே சிந்தனையிலாழ்ந்தான். பிறகு, "எவ்வளவு பணம் ஹட்டன் பாங்கிலிருந்து வாங்கினார்?" என்று கேட்டான்.

"77000 பவுண்டு" என்று குலோரியா சொன்னாள்.

"இந்த 77000 பவுண்டும் ஹட்டன் வீட்டிலேதானே யிருக்கும். 77000! அதுவுமல்லாமல் அந்த ஹட்டன் உன்னை சாப்பாட்டுக்கு அழைத்திருக்கிறார்" என்று ஸ்மித் சொல்ல,

"ஆம். அதற்கென்ன?" என்று கேட்டாள்.

"என்னவா! இத்தருணத்தை விட்டால் வேறு வாய்க்காது. உன்னால் ஹட்டனை மயக்க முடியாதா?" என்று ஸ்மித் கேட்டான்.

குலோரியா ஒன்றும் பதில் சொல்ல வில்லை.

ஸ்மித் இன்னும் "எனக்கு ஹட்டன் வசிக்கும் வீடு நன்ருகத் தெரியும். 2 வேலைக்காரர்கள் உண்டு. ஆனுல் ஹட்டன் பெண்ணுசை பிடித்தவர். எப்பொழுதும் ஏதாவது பெண்ணை வீட்டில் விருந்துக் கழைத்தால், அன்று எல்லா வேலைக்காரர்களையும் எங்காவது அனுப்பி விடுவார்" என்ருன்.

"ஆனுல் என்னை அவர் வீட்டுக்கு அழைக்கவில்லையே" என்று குலோரியா சொல்ல, "உனக்கு தெரியாது. ஹோட்டலில் போய் சாப்பிட்டாலும், சாப்பிட்டபின் தனது வீட்டுக்கு கொஞ்ச நேரம் யிருந்து போகலா மென்று அழைப்பார். அப்படி அழைப்பாராயின் நீ சரி யென்று ஒப்புக் கொண்டால் நமது காரியம் முடிந்து விடும்" என்ருன்.

"எப்படி முடியும்? நான் அவர் வீட்டுக்கு போனதும் ஒரு துப்பாக்கியைக் காண்பித்து பயமுறுத்தி பணத்தை திருடிக் கொண்டு வர வேண்டுமா?" என்று குலோரியா கேட்டாள்.

"முட்டாளைப் போல் பேசாதே. நீ ஒன்று செய்ய வேண்டியது. அவருடன் சந்தோஷமாக சிரித்து சல்லாப விளையாட்டுகள் செய்து கொண்டிருந்தால், நான் அங்கு வந்து வேலையை முடித்து விடுவேன், உனக்கு ஒன்றும் அபாயம் வராது. நான் அவ்வீட்டிலேயே ஒழித்துக் கொண்டிருப்பேன்" என்ருன்.

குலோரியா சிறிது நேரம் பதில் சொல்லாமல் யோசித்தாள். பிறகு, "அவர் வேலைக் காரர்களை வெளியே அனுப்பாதிருந்தால்?" என்று கேட்டாள்.

"அதைப் பற்றி நீ யோசிக்க வேண்டாம். வேலைக்காரர்கள் யாரும் யிருக்க மாட்டார்களென்று எனக்கு நன்ருக தெரியும். இத் தருணத்தை விடக்கூடாது" என்று சொன்னுன்.

குலோரியா பயத்துடன் தலையை யசைத்துக் கொண்டே, "இது பெரிய சமாச்சாரம். எனக்கு பயமாக யிருக்கிறது. எனக்கு சிறிய திருடுகளே போதும்" என்ருள்.

"சீ! உனக்கென்ன பைத்தியமா? இது தான் நல்ல அறுவடை காலம். போலீஸ் என்னைக் கவனிப்பது போல் உன்னை கவனிக்க மாட்டார்கள். பெரிய திருடில் நீ சம்பந்தப் பட்டிருப்பா யென்று நினைக்கவே மாட்டார்கள். நான் சொல்வதுபடி செய்" என்ருன்.

அவள் சிறிது மறுமுறையும் யோசித்தாள். பிறகு "சரி திருடென்றால் எல்லாம் ஒன்று தான். சிறியதுக்கும் தண்டனை, பெரியதுக்கும் தண்டனை" என்று சம்மதித்தாள். பிறகு சிறிது நேரம் தங்கி டீ குடித்த பின், அங்கிருந்து வீட்டுக்கு புறப்பட்டாள். மாரீஸ் பாங்க் வழியாக போக வேண்டிய திருந்ததால், டாக்ஸி காரில் போனால், மாரீஸ் பார்த்து விட்டால், சாதாரண கிளர்க் வேலை பார்ப்பவள் டாக்ஸியில் போகிறாளென்று சந்தேகப்படக் கூடுமென்று யோசித்து நடந்து சென்றாள். சிறிது தூரம் சென்றதும் தனது தோளின் பேரில் ஒரு கை வைத்தது தெரிந்து திரும்பினாள். டாம் நின்றான். "குலோரியா! உன்னிடம் சில சமாச்சாரம் பேச வேண்டும்" என்றான்.

டாம் அங்கு சந்தித்ததை நினைத்து ஆச்சரியப்பட்டு "நான் இவ்வழியாக வருவே னென்று உங்களுக்கு எப்படி தெரியும்? நான் மாரீஸ் பாங்கில் வேலை செய்து வருவது தெரியுமோ? யார் உங்களுக்கு சொன்னது?" என்று கேட்டாள்.

டாம் பதில் சொல்ல தயங்கியவாறு "இன்ஸ்பெக்டர் பென்டன் சொன்னார். அவர் நல்லவர் தான். உன்னைப் பற்றி இழிவாக பிறகு ஒன்றுமே சொல்லவில்லை" என்றான்.

"அவரைப் பற்றி பேசுவதில் பிரயோஜனமில்லை. தற்போது எனக்கு அவசரமான ஒரு வேலை யிருப்பதால் நான் போக வேண்டும்" என்று சொல்லியவாறு நடந்தாள். டாம் உடனே அவள் கையைப் பிடித்துக் கொண்டு "குலோரியா! என்னிடம் சொல்ல மாட்டாயா? நீ ஏன் செய்தாய்? உன்னைத் தூண்டியது யார்?" என்று கேட்டான்.

அவள் சிறித்தாள்,

"ஏதோ காரணத்தினால் தான் நீ இக்கூட்டத்தில் சேர்ந்திருக்கிறாய்" என்றான்.

"எந்த கூட்டத்தில்?" என்று கேட்டாள்.

"நீ தற்போது ஒரு ஹோட்டலி லிருந்து வந்தாயே! உன்னுடன் ஸ்மித் பெயர் போன திருடனும் இருந்தானே! அவன் எத்தனையோ முறை ஜெயிலுக்கு போனவன்; அத்துடன் அவனுடன் ஒத்து வேலை பார்த்து வரும் ஜேனும் இருந்தாளே; அவளும் ஜெயிலுக்கு போயிருக்கிறாள். தற்போது மாரீஸ் பாங்கில் வேலை செய்து வருகிறாள். ஆனால்

அவர்கள் யாரென்று சரிவர உனக்கு தெரியாதென்று நினைக்கிறேன்" என்று டாம் சொன்னான்.

"உங்களுக்கு எப்படி அவர்களைப் பற்றி இவ்வளவு விஷயம் தெரியும்! நீங்கள் இன்ஸ்பெக்டர் பெண்டனுடன் சேர்ந்து வேலை பார்த்து வருகிறீர்களோ? நீங்களும் போலீஸில் சேர்ந்து விட்டீர்கள் போல் தெரிகிறது" என்றாள்.

"இதைப் போல் பேசாதே குலோரியா. யோசனை செய். இவ்வா றெல்லாம் இவர்களுடன் சேர்ந்திருப்பது ஒழுங்கா? ஏதோ காரணத் தால் இவர்களுடன் சகவாசம் வைத்துக் கொண்டு, அவர்களை விட்டு நீங்க வழியில்லாமல் அவஸ்தை படுவதானால், என்னிடம் சொல். நான் உனக்கு வேண்டிய உபகாரம் செய்கிறேன்" என்று கெஞ்சிய வாறு கேட்டான்.

குலோரியா சிறித்துக் கொண்டே "அதெல்லாம் ஒன்றுமில்லை. நான் போய் வருகிறேன்" என்று சொல்லி நடந்து ஒன்றிரண்டு வீதிகள் திருப்பிய பின் ஒரு டாக்ஸி காரில் ஏறி தனது இருப்பிடம் போனாள். தற்போது அவள் தங்கியுள்ள இடமோ, மிக செல்வாக் குடையவர்கள் தங்குமிடம். அங்கு சென்றதும் லிப்டில் ஏறி 3-வது மெத்தைக்குப் போனாள். அங்கு அவளது இருப்பிடத்தில் விலை யுயர்ந்த கட்டில் மேஜை, நாற்காலிகள், சோபாக்கள் போடப்பட் டிருந்தன. அங்கு போனதும் ஒரு மணி அடித்தாள். ஒரு வேலைக் காரி உடன் வந்தாள். "ஸலி! எனக்கு டீ தேவையில்லை. எனது நீல கவ்னை எடுத்து வை. எனக்கு ஒரு கார் தேவை. 7-25க்கு இங்கு வருமாறு ஏற்பாடு செய்" என்றாள்.

இந்த குலோரியாவுக்கு பாங்கில் கொடுக்கும் சம்பளம் வாரத் திற்கு நாலே பவுண்ட். (தொடரும்.)

187036

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

அரை விலை!   அரை விலை!!

ஸஃப்ஹான மௌலூது.

ஸஃப்ஹான மௌலூது, யாவெலய்யதி பைத்து, யாகுத்பா பைத்து, யாவெலய்யதி ஷைகி பைத்து ஆகியவைகள் இந்த கிதாபில் அடங்கி இருக்கின்றன. இது பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்டு, போட்டோ அச்சில் சுத்தமாக பிழைகளில்லாமல் 10 அங்குல நீளமும் 7 அங்குல அகலமுள்ள கிதாபாக அச்சிடப்பட்டு, பைண்டு செய்யப் பட்டிருக்கிறது.

இதன் விலை ரூ. 1—8—0

9-11-54 தேதி வரை எங்களிடம் ஸ்டாக் இருக்கும் வரை ஒரே நேரத்தில் ஆறு கிதாபுகள் வாங்கினால் அரை விலையாக 12 அணா வீதம் கொடுக்கப்படும்.

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
20, ஹைரோட் திருவல்லிக்கேணி,
மதருஸ் 5.

1955-வது

வருஷத்தின்

ஹமீதிய்யா முஸ்லிம்

காலண்டர்

வெளிவந்து விட்டது.

இதில் இங்கிலீஷ், தமிழ், அரபு ஆக மூன்று தேதிகளும் 3 கலர்களில் அச்சிடப்பட்டு, ஒரு மாதத்திற்கு ஒரு ஷீட்டாக 12 ஷீட்டுகள் அடங்கியுள்ளது. ஒவ்வொரு ஷீட்டிலும் தொழுகைகளின் நேரங்களாகிய அவ்காதுஸ்ஸலாத்தும் சேர்க்கப்பட்டுள்ளது. இவை சொற்ப காலண்டர்களே அச்சிட்டு வருவதால் ஜனவரி-மீ வருவதற்குள் செலவாகி விடுவது சகஜம். ஆதலால் தங்களுக்கு தேவையுள்ள காலண்டர்களுக்கு உடனே ஆடர் செய்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஒரு காலண்டர் விலை அணா. 10

நூறு காலண்டர் விலை ரூ. 50

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.